

# இலக்கு

இதழ் 92

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஆகஸ்ட் 23, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1



பகுதி 01

## நம் எதிர்காலம் நம் கையில்!

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் **பெ. மணியரசன்**



## இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் சிங்களக் குடியேற்றங்கள்

அன்பன்



## உலகளாவிய அறிவியல் ஆராய்ச்சி போட்டியில் சாதனை: பட்டிருப்பு தேசிய பாடசாலை பெருமிதம்

ரவீந்திரமூர்த்தி



பகுதி 01

## ‘பயங்கரவாதத்துக்கு எதிரான போர்’ – மாலியில் பிரான்சு முன்னெடுத்துள்ள நவகாலனீய நடவடிக்கை

தமிழில் **ஜெயந்திரன்**

## மாலி மக்களின் கோரிக்கைகளை ஐ.நா கருத்தில் கொள்ளவில்லை

தமிழில் **பிரபா**





## பாதுகாப்பு அமைச்சும் சிவில் நிர்வாகமும்

பி.மாணிக்கவாசகம்

# நிதி கிடைத்தால் தான் புதிய அரசு தப்பிப்பிழைக்கும்



சிறீலங்காவில் ஆட்சி அமைத்துள்ள புதிய அரசு, தனக்கான நிதியை பெற்றுக்கொண்டால் மட்டுமே பாரிய நிதி நெருக்கடியில் இருந்து தப்பிப் பிழைக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

சிறீலங்காவின் தோல்வியடைந்த பொருளாதாரத்தை கோவிட்-19 மேலும் பாதித்துள்ளது. வெளிநாட்டு கடன்களை மீள் செலுத்துவதற்கான நிதியை தேடவேண்டிய கட்டாயத்தில் புதியஅரசு உள்ளது. 2024ஆம் ஆண்டு வரையிலுமான ஒவ்வொரு வருடமும் அதன் மீள்செலுத்தும் தொகை 4.5 பில்லியன் டொலர்களாகும். அதாவது இந்த கால எல்லைக்குள் 30 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டும் என பொருளியல் ஆய்வாளர் ஏ. விஜயவர்த்தனா அல்ஜசீராவுக்கு தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற புனித ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட்-19 என்பன சிறீலங்காவின் பொருளாதாரத்தை அதிகம் பாதித்துள்ளன. தற்போதைய நிலையை அரசு தக்கவைக்க வேண்டும் எனில் வெளிநாடுகளில் இருந்து பணத்தை பெறவேண்டும்.

2005 ஆம் ஆண்டு மகிந்த பதவியேற்ற பின்னர், ஆரம்பித்த இந்த பொருளாதார நெருக்கடியை சீனாவிடம் இருந்து அதிக வட்டிக்கு வாங்கிய பெருமளவான கடன்கள் மேலும் அதிகரித்துள்ளன. அது மைத்திரியின் காலத்தில் மேலும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் 50,000 பட்டதாரிகளுக்கும், குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100,000பேருக்கும் வேலைவாய்ப்புக்களை அரசு நிறுவனங்களில் வழங்கப்போவதாக கோத்தபாயா தெரிவித்துள்ளது, நிதி நிலைமையை மேலும் மோசமாக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எனது அனுமதியின்றி வடக்கில் அபிவிருத்தியில்லை

## அங்கஜன் ஆணவம்

எனது அனுமதி இன்றி எந்த அபிவிருத்தித் திட்டங்களும் வடக்கில் இடம்பெறக்கூடாது என சிறீலங்கா அரசினால் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரான சிறீலங்கா ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். அங்கஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (18) அவர் யாழ். அரச அதிபருக்கு எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். வடக்கில் இடம்பெறும் எல்லா அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் தனக்கு தகவல்களை தருமாறும் அவர் யாழ். அரச அதிபரை கோரியுள்ளார்.

தனது அலுவலகத்தின் இணைப்பு அதிகாரியாக தனது தந்தையாரை நியமித்துள்ள அங்கஜன் அவருக்கு ஒரு அலுவலகத்தை தருமாறும் அரச அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனிடையே, அங்கஜன் கோத்தபாயாவின் நேரடியான வழிநடத்தலில் இயங்கி வருவதால், புலம்பெயர் தேசங்களில் இருந்து வடபகுதியில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு மிகப்பெரும் ஆபத்துக்கள் நேரலாம் எனவும் புலம்பெயர் மக்கள் பலர் தமது பணத்தை இழக்க நேரிடும் எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# ரஸ்ய எதிர்க்கட்சி தலைவருக்கு விஷம் கொடுக்கப்பட்டது

## பின்னணியில் புட்டின்



ரஸ்ய அதிபர் விளாடிமிர் புட்டினை கடுமையாக எதிர்த்துவந்த எதிர்க்கட்சித்தலைவரானஅடிலக்ஸி நவல்னிக்கு விஷம் கொடுக்கப்பட்டதால், அவர் கோமா நிலையை அடைந்துள்ளார்.


சைபீரியா மருத்துவமனையில் அவசர சிகிச்சை பெற்றுவந்த அவர், நேற்று (22) ஜேர்மன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை (20) ரஸ்யாவில் விமானப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது, விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே நவல்னி உடல்நலக் குறைவிற்கு உள்ளானார். மேலும்அவர்காலையில் தேநீர் அருந்தியதாகவும், அதிலேயே விஷம் கலந்திருக்கக் கூடும் எனவும் அவரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். ஊழல் தடுப்பு பிரச்சாரத்தை மேற்கொள்ளும் நவல்னி, ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை கடுமையாக விமர்சிப்பவர்களில் ஒருவராக இருந்தார். நவல்னி முன்னர் பலமுறை தாக்குதல்களுக்கும் உள்ளாகியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக அருட்தந்தை

## அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். அருட்தந்தை அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அவர்கள் இம்மாதம் 29ம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள புனித லூசியா தேவாலயத்தில் ஆயராக அருள்பொழிவு செய்யப்படுவார்.



ஆயராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் 53 வயது நிரம்பிய அருட்தந்தை பிள்ளைநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தை சொந்த இடமாக கொண்டவர். 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16ம் திகதி இதே புனித லூசியா தேவாலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயராகத்தெரிவு செய்யப்படும் நேரத்தில் அருட்தந்தை அவர்கள் கொழும்பு மறைமாவட்டத்தின் இறையியற் கல்லூரியின் இயக்குநராகவும், கொழும்பு புனித ஜோசப் கல்லூரியின் துணை அதிபராகவும் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஆயராக அருள்பொழிவு செய்யப்படும் அருட்தந்தை க்கு 'இலக்கு' இணையத்தளம் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறது.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக செல்வம் அடைக்கலநாதன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய பேச்சாளராக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் புதிய கொறடாவாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சுற்றுச் சூழல் உடகவியலாளர்கள் 10 பேர் படுகொலை

கடந்த ஐந்து ஆண்டுகளில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்திவந்த 10 ஊடகவியலாளர்கள் உலகம் எங்கும் கொல்லப்பட்டுள்ளதாக உலக சுற்றுச் சூழல் தினத்தை (22) முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

50இற்கு மேற்பட்ட வன்முறைகள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிலிப்பைன்ஸ் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் அங்குள்ள தீவுக்கூட்டங்களில் ஏற்படும் சூழல் பாதிப்புக்கள் தொடர்பில் தகவல்களை வெளியிட்ட அமெரிக்க ஊடகவியலாளர் கொலை முயற்சியில் இருந்து கடந்த வருடம் தப்பியுள்ளார்.

கடந்த 10 வருடங்களில் 20 சூழலியல் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த வன்முறைகளில் 66 விகிதமானவை ஆசிய மற்றும் அமெரிக்க நாடுகளில் இடம்பெற்று

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழ் மக்களின் வாக்குகளை குறிவைக்கும் கமலா ஹாரிசன்

*எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் தற்போதைய அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் போட்டியிடுகின்றார். ஜன நாயகக் கட்சி சார்பில் ஜோ பிடன் அதிபர் பதவிக்கும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் துணை அதிபர் பதவிக்கும் போட்டியிடுகின்றனர்.*



*அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை அதிகாரபூர்வமாக தேர்வு செய்யும் இணைய மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் கமலா ஹாரிஸ் பேசுகையில், தன் பேச்சினிடையில் குடும்ப உறவுகள் குறித்துப் பேசிய போது 'சித்தி' என்று தமிழில் குறிப்பிட்டார்.*

*அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் இந்திய மொழியில் அதுவும் தமிழில் 'சித்தி' என்று குறிப்பிட்டது அமெரிக்க வாழ் இந்தியர்களிடம், குறிப்பாக தமிழர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.*

*மேலும் இந்த வார்த்தை குறித்து பலரும் சமூக வலைதளங்களில் உணர்ச்சிப்பூர்வமான கருத்துகளைப் பதிவு செய்து வருவதைப் பார்த்த அமெரிக்கர்கள் உள்ளிட்ட பலரும் தற்போது 'சித்தி' என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன என்பதை இணையத்தளத்தில் தேடி வருகின்றனர்.*

*கமலா ஹாரிசின் தாயார் சியாமளா கோபாலன் சென்னையில் பிறந்தவர் என்பதுடன், இவரது சித்தி சரளா கோபாலன் தற்போதும் சென்னையில் வசித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*கமலா ஹாரிஸ் கலிபோர்னியா மாகாண அட்டர்னி ஜெனரலாகப் போட்டியிட்ட போது, அவர் வெற்றி பெற வேண்டி பெசன்ட் நகரிலுள்ள பிரசித்தி பெற்ற இந்துக் கோவிலில் அவரது சித்தி சரளா கோபாலன் அர்ச்சனை செய்து, 108 தேங்காய்கள் உடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*அமெரிக்காவில் தற்போது 2 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் குறிப்பாக கூகுள் நிறுவனத்தின் பிரதம அதிகாரி சுந்தர் பிச்சை, நடிகை மிண்டி காலிங், பிரமிளா ஜெயபால் உள்ளிட்டவர்கள் அடங்கும்.*

# மாகாணசபைகளுக்கான தேர்தல் மிக விரைவில்

*சிறீலங்காவில் உள்ள மாகாணசபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மாதங்களில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*சிறீலங்காவின் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் கடந்த வெள்ளிக் கிழமை (21) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மாகாண சபைகளுக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*

*194 பில்லியன் ரூபாய்கள் மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதானது தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதை காட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விவாதம் எதிர்வரும் வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.*

## இலக்கு

## இறைமையின் பெயரால் இனத்துவ அழிப்பு
## உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தான முன்னுதாரணம்

**"மக்களின் பிரதிநிதிகள் ஆகிய நாங்கள் பெரும்பான்மையினரின் அவாவினையே எப்பொழுதும் மதிக்க வேண்டும். அப்படியென்றால்தான் மக்களின் இறைமை காப்பற்றப்பட முடியும். என்னுடைய பதவிக்காலத்தில் எங்களுடைய தேசத்தின் அதிஉயர் சாசனமாகிய அரசியலமைப்பின் அடிப் படையில் ஒற்றையாட்சியையும் பௌத்தசாசனத்தையும் பாதுகாத்து, பௌத்த சாசனத்தை வளர்ப்பேனென உறுதிமொழியளிக்கிறேன். இதற்கமைய எப்படி நல்லாட்சியை வழங்குவதென அறிவுரை பெறுவதற்கு முன்னணியில் உள்ள பௌத்த பிக்குகளை கொண்ட அறிவுரைக்கும் கழகம் ஒன்றை அமைக்க வுள்ளேன். எங்களுடைய பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வகையில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கவென ஜனாதி பதியின் செயலணி ஒன்றை நிறுவியுள்ளேன். புத்தத்திற்கு முன்னுரிமையை உறுதிப்படுத்தும் அதே வேளையில், எந்த ஒரு குடிமகனும் தன் விருப்புக்கு அமைய அவனுடைய அல்லது அவளுடைய சமயத்தை வழிபடும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் நல்லது என்பதையும் மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அரசாங்கம் தேசிய பாரம்பரியத்தை, கலாச்சாரத்தை மற்றும் எங்கள் அடையாளங்களை நிகழ்த்துகலைகள் நாட்டார் கலைகள் உட்படப் பாதுகாப்பதில் விசேட கவனம் செலுத்தும். .... எங்களுடைய அரசாங்கத்தின் முதன்மை முன்னுரிமை தேசிய பாதுகாப்புக்கே அளிக்கப்பட்டுள்ளது" எனச் சிறீலங்கா ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச சிறீலங்கா அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையில் உலகுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.**

**இந்த உரையின் படி பெரும்பான்மை மக்களுடைய விருப்பை நிறைவேற்றுவதே இறைமையைப் பாதுகாப்பதற்கான முறைமை என்கிற தவறான விளக்கத்தைச் சிறீலங்காவின் ஜனாதிபதி உலகுக்கு எடுத்துச் சொல்லி தேச இனம் என்ற உரிமையின் அடிப்படையிலான அனைத்துலக சட்டங்களின் பாதுகாப்பை ஈழத்தமிழர்கள் பெறாதவாறு தடுப்பதே அவரின் அரசாங்கத்தின் நோக்கம் எனத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். கூடவே சிறுபான்மையினராக உள்ள முஸ்லீம்கள், மலையகத்தமிழர்கள் ஆகியோர்களுக்கான அனைத்துலகச் சட்டப் பாதுகாப்புகளும் இதனால் இழக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது. சிறீலங்கா அரசாங்கத்தின் இந்த முன்னுதாரணமானது உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தை விளைக்கக் கூடியதாகவும் அமைகிறது.**

**இந்நேரத்தில் 'மில்லேனியத்தில் இறைமை - அறிமுகம்' *(Introduction : Sovereignty at the Millennium)* என்னும் இறைமை குறித்த அரசியல் ஆய்வுக்கு வழிகாட்டுக் கட்டுரையினை அமைத்த றெபேர்ட் ஜக்சன் அவர்கள் இறைமை என்பது குறித்து வெளியிட்ட கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. "இறைமை (அது பிறந்த 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில்) ஒரு அரசு இன்னொரு அரசின் தலையீட்டில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வெளிவிவகாரம் சார்ந்த ஒரு அரசியல் முறைமையாகத் தோன்றியதே தவிர, அது உள்நாட்டுக்குள் மற்றைய அடையாளங்களைப் புறந்தள்ளி ஒரு அடையாளம் தன்னை மட்டும் ஆட்சியுரிமையாளராக நிலைநிறுத்திக் கொள்ளும் அதிகாரம் அல்ல. அத்துடன் கிறிஸ்தவ சகாப்த எழுச்சியுடன் மத்தியகாலக் கோட்பாடாகத் தோற்றம் பெற்ற இறைமை காலத்துக்கு ஏற்பத் தன்னை உருமாற்றிக்கொள்ளாது விட்டால், அனைத்துலக அரசியலில் அது இறந்து விடும். இறைமைக் கோட்பாட்டுக்கு மாற்றான புதிய கோட்பாடு ஒன்று தேவையாக உள்ளது."**

**இந்தப் பின்னணியில் மாற்றுக்கோட்பாடாக நல்லாட்சி, மனித உரிமைகள், சுதந்திரமான தெரிவு முறை என்பன எந்த அளவுக்கு ஒரு நாட்டில் காணப்படுகிறதோ அந்த அளவுக்கு அந்நாட்டில் பிறநாடுகளின் தலையீடு இல்லாதிருக்கும், என்னும் அனைத்துலக நாடுகளின் ஒன்றிய அளவீட்டு முறை தோன்றியது. அனைத்துலக முறைமைகளுக்கு அமைய மறுத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் வழிகாட்டலில் நின்று விலகிய ராஜபக்ச குடும்ப ஆட்சி, சிறீலங்காவை பௌத்த சிங்கள நாடாகப் பிரகடனப்படுத்தி இறைமையின் பெயரால் இனத்துவ அழிப்பினை பாராளுமன்றக் கொடுங்கோன்மை வழி முன்னெடுக்கிறது. இந்த அபாயத்தில் இருந்து ஈழத்தமிழினத்தை உலகம் காப்பாற்ற வைப்பதற்கு ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பு மையத்துடன் அனைவரும் கூட்டாக முயற்சிக்க முன்வரவேண்டும் என்பதே 'இலக்கின்' இன்றைய அழைப்பாக உள்ளது.**

**– ஆசிரியர்**

# தமிழருக்கான தீர்வை எந்த அரசியல் கட்சியும் பெற்றுத் தராது!

## யாழ். மாவட்ட வாக்காளரின் கருத்து

*அறிவார்ந்த ஆய்வுகளே இன்று எமது தேவையாக உள்ளது. பொதுவாக நிகழ்வுகளை அவதானிக்கின்ற போதும், அவற்றின் உள்ளார்ந்த காரணங்களை அறிய நாம் தவறி விடுவது, தொ டரும் தோல்விகளுக்கு காரணமாக அமைகிறது என்பதே கசப்பான உண்மையாகும். அந் தவகையில் அண்மையில் நட ந்து முடிந்த இலங்கையின் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பாக பல்வேறு 'ஆய்வுகளும்' கருத்துக்களும் பல்வேறு தரப்பினராலும், ஊடகங்களூடாக வெளிக் கொணரப்பட்ட வண்ணம் உள்ளன. எனினும் தமிழ் மக்கள் தீர்ப்பை உடனடியாக அவர்களின் கருத்துக்கள் ஊ டாக அறிந்து கொள்வது என்பது மிக முக்கியமான ஒரு விடயமாக 'இலக்கின்' ஊடக குழு கருதியது. இதற்காக தமிழ் மக்களை பெரும்பான்மையாக கொண்ட யாழ். மாவட்டத்தை தெரிவு செய்து, வலுவான புள்ளிவிபர நிகழ்தகவு கணக்கீட்டிற்கு அமைய அங்குள்ள தமிழ் வாக்காளர்களின் சிறு தொகையினரை எழுந்தமானமாக தெரிவு செய்து ஓர் விரைவான ஆய்வை செய்ய எண் ணியது. இதற்காக ஒப்புதல் அளித்த மற்றும் வாக்களித்த வாக்காளர்களிடம் மூன்று கேள்விகள் முன்வைக்கப்பட்டன.*

***1. நீங்கள் இந்த தேர்தலில் எந்த கட்சிக்கு வாக்களித்தீர்கள்?***


***2. ஏன்***


***3. தமிழர்களுக்கானநிம்மதியானவாழ்வை(தீர்வை) யார்பெற்றுப்பெற்றுத் தருவார்கள்?***

*இந்த கேள்விகளுக்கான பதில்கள் பல்வேறு விடயங்களை வெளிக் கொணர்ந்துள்ளதை காணக்கூடியதாக இருந்தது.*


*இவ்வாய்வில் எழுந்தமானமாக பங்குபற்றியவர்களின் விபரங்களை பார்க்கும் போது, இளையோர் (50 வயதுக்கு உட்பட்டவர்) அதிகளவில் (70%) இருப்பதும் தேர்தலில் பங்கு பற்றியுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஆண்கள் 75%மும் பெண்கள் 25%மும் வாக்களித்திருக்கலாம் என காணக் கூடியதாக உள்ளது. இதுவும் இம்முறை யாழிலிருந்து பெண்கள் எவரும் தேர்ந்தெடுக்கப்படாமைக்கான காரணமாக இருக்கலாம்.*

**எனவே இனிவரும் காலங்களில் தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.**






*இவ்வாய்வில் மாணவர்கள் முதல் ஓய்வு பெற்றோர்வரை 14 சமூக தரத்தில் உள்ள யாழிலுள்ள 14 பிரதேச வாக்காளர்கள் கலந்து கொண்ட னர். இவர்களில் 30%மானவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும், 25%மானவர்கள் தமிழ் தேசிய முன்னணியினருக்கும், 20%மானவர்கள் தமிழ்மக்கள் கூட்டணிக்கும், 15% மானவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், 10 வீதமானவர்கள் ஈழ மக்கள் சனநாயக கட்சிக்கும் வாக்களித்ததாக தெரிவித்துள்ளனர். இது யாழ். மாவட்டத்தின் மொத்த வாக்களிப்பு வீதத்திற்கு அண்மித்ததாக அமைந்துள்ளது. இங்கு கிளிநொச்சி மாவட்டத்தின் கருத்துக்கள் உள்வாங்கப் படாமையினால், சிறு வேறுபாடுகள் காணப்படுவது கவனத்தில் கொள்ளத் தக்கது.*




*இவ்வாய்வில் முக்கியமாக நீங்கள் வாக்களித்த கட்சியை ஏன் தெரிவு செய்தீர்கள் எனும் கேள்விக்கான பதில்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களையும், விருப்புகளையும் வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. மக்கள் ஏறத்தாழ 11 பிரதான காரணங்களை முன்வைத்தனர். அவையாவன உதவிகளுக்கானநன்றி, சமூகஅபிவிருத்தி, நீண்டகாலகட்சி, அனுபவம்வாய்ந்த அரசியல்வாதி, பெற்றாரின் விருப்பு, தனிப்பட்ட வேட்பாளர்கள் மீதான விருப்பு, மாற்றத்திற்காக, வேலை பெற்று தந்தமைக்காக, புதிய கட்சிகளின் நேர்மைக்காக, தமிழ் கட்சிகள் மீதான வெறுப்பு, தமிழ் தேசியத்தின் மீதான பற்று ஆகிய வகைகளுள் அடங்குகின்றன.*




*இந்த தேர்தலில் மக்களின் தேர்வுகள் வழமைக்கு மாறாக கட்சி, கொள்கை, தலைமை என்பவற்றை விட பல்வேறு தனிப்பட்ட காரணங்களால் சிதறுண்டு போயிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மாற்றம், வேலை, உதவி, அபிவிருத்தி மற்றும் வெறுப்பு ஆகிய காரணங்களுக்காக 40%மான வாக்குகள் பிரிவடைந்து சென்றிருப்பதை காணலாம். இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியில் நின்று, இளையோரின் வேலைவாய்ப்புகள், சமூக அபிவிருத்தி ஆகிய விடயங்களையும் கருத்தில் கொள்வதுடன், இளையோரின் கருத்துக்களை உள்வாங்கி இளையோரை அதிகம் உள்வாங்கி தம் கட்சிகளை வளர்ச்சிப் பாதையில் வளர்த்தெடுக்க வேண்டியது இன்றியமையாதது.*





தொடர்ச்சி 13ஆம் பக்கம்

**இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த வியாழக்கிழமை (20) இடம்பெற்றது. அப்போது இடம்பெற்ற இலங்கை ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த முக்கிய கருத்துக்கள் வருமாறு.**

## ஒவ்வொரு செயலுக்கும் அதன் எதிர் எதிர்வினை இருக்கும்

**– தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்**



வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தேசம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்களின் உள்ளார்ந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு வரலாறு பற்றிய தவறான கண்ணோட்டங்கள் களையப்பட்டால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் இந்த நாட்டில் உதயமாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. ஒவ்வொரு செயலுக்கும் அதன் எதிர் எதிர்வினை இருக்கும் என்று தெரிவித்த விக்னேஸ்வரன், “காலா கால தே பாலா பாலா டி” என்று சிங்கள மொழியில் குறிப்பிட்டார்.

## சொந்த மக்கள் மேல் தாக்குதல் நடத்தும் அரசுக்கு இறைமைக் கோட்பாடு பாதுகாப்பை வழங்காது

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**



சிறீலங்காவின் அதிபர் ஆற்றிய உரையின் ஆங்கில மொழியாக்கத்தை வாசித்துக்காட்டி கஜேந்திரகுமார் தனது உரையை ஆற்றினார்.

சிறீலங்கா அதிபரின் உரையில் மூன்றாம் பக்கத்தில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது.

“மக்களால் அளிக்கப்பட்டிருக்கும் ஆணையை மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்”,

மேலும் சிறீலங்கா அதிபர் அந்தப் பந்தியில் இவ்வாறு தொடர்ந்து சொல்கிறார்.

“எப்படிப்பட்ட எதிர்பார்ப்போடு மக்கள் எமக்குஇந்தப்பலமானஆணையைதந்திருக்கிறார்கள் என்பது தொடர்பாக எங்களுக்கு மிகவும் தெளிவான புரிதல் இருக்கிறது. எக்காரணம் கொண்டும் அப்படிப்பட்ட எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப்பட நாம் எந்தவிதத்திலும் இடம் கொடுக்க மாட்டோம்.”

**(திரு.அங்கஜனை விழித்து) உதவி தவிசாளர் அவர்களே,**

தனது கட்சியைப் பொறுத்தவரையில் மக்கள் கொடுத்த ஆணை தொடர்பாக சிறீலங்கா அதிபர் அப்படிப்பட்ட ஒரு புரிதலைக் கொண்டிப்பது

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மமதையோடு செயற்பட்டால் இந்நாடு மீண்டும் இனவாதம் என்கிற சகதியில் தள்ளப்படும்

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன்**



தமிழ் மக்களின் பிரச்சினைகளில் இந்தியா தலையிட வேண்டும். இறுதி யுத்தத்தை நிறைவு செய்வதற்கு உதவிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவும் உதவ வேண்டும்.

நாட்டின் முக்கியமான பிரச்சினை தொடர்பில், நாட்டின் தலைவர் பேசாமல் போனது ஒரு துரதிஸ்டமானது. தமிழ்த் தேசிய இனம், கடந்த 80 வருடங்களாகப் பல்வேறு இனப்படுகொலைகளுக்கு முகங்கொடுத்திருந்தது. இதனாலேயே, பல போராட்டத்திலும் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. தற்போதைய அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்து விட்டது என்பதற்காக மமதையோடு செயற்பட்டால் இந்நாடு மீண்டும் இனவாதம் என்கிற சகதியில் தள்ளப்படும்.

## பௌத்தமும் தமிழும் இறுக்கப் பிணைந்திருந்ததே வரலாறு

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம்**



பௌத்தமும் சிங்களமும் இணைய முன்னரே பௌத்தமும் தமிழும் இறுக்கப் பிணைந்திருந்ததே வரலாறு, பௌத்த இலக்கியங்கள் பாளி மொழிக்கு முன்னர் சிங்கள மொழிக்கு முன்னர் தமிழ் மொழியில் ஆக்கப்பட்டமை வரலாறு.

பௌத்தம் பௌத்தம் என்று உரத்து உரைக்கின்றவர்களே பௌத்த சித்தாந்தத்தை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். பௌத்த மதத்தை ஸ்தாபித்த கௌதம புத்தனின் பின்னணியை நீங்கள் அனைவரும் மறந்து விட்டீர்கள்.

உலகின் ஒரே ஒரு இந்து நாடான நேபாள நாட்டின் இந்து மன்னன் சுத்தோதனனுக்கும் அவன் மனைவி மாயாதேவி மகாராணிக்கும் இரண்டாவது இளவளாக இம் மண்ணில் அவதரித்தவர் சித்தார்த்த இளவரசனாவார்.

கௌதம புத்தர் தன்னை கடவுளாக ஒரு நாளும் உருவகித்தது இல்லை. பௌத்தம் இலங்கைக்கு மட்டுமல்ல சிங்களவருக்கு மட்டுமல்ல உலகிற்கே ஒளியூட்டும் அர்த்தம் பொதிந்த வாழ்வியல் நெறி. பௌத்த இலக்கியங்கள் பாளி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு அதிக நேரம் தேவை

**– தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்**



எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இம்முறை நாடாளுமன்றத்தில் உரையாற்ற குறைந்தளவு நேரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்குத்தான் விவாதத்திற்கு அதிக நேரம் தரப்படுகிறது. எனினும், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

60-40 என்ற அடிப்படையில் 60 வீதம் எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும். இங்கு 60 வீதத்தை ஆளுங்கட்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

ஜனநாயகம் கிடைக்க வேண்டும் என்றால் எதிர்க்கட்சிக்கு தான் விவாதம் செய்வதற்கு அதிக நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

## தமிழ் மக்களின் இருப்பும் எதிர்காலமும் கேள்விக்குறியாகும்

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்**



ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையின் எந்தவொரு இடத்திலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வு திட்டம் தொடர்பாகவோ, 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகவோ அவர் தெரிவிக்காமை சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் தீர்வு ஒன்று இல்லாவிட்டால், தமிழ் மக்களின் இருப்பும் எதிர்காலமும் கேள்விக் குறியாகும் என்பதை தமிழ் மக்கள் மனதில் வைத்து இனிவரும் காலங்களில் செயற்பட வேண்டும்.

# இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத்தை சிதைக்கும் சிங்களக் குடியேற்றங்கள்

**அன்பன்**

இலங்கைத் தீவில் தமிழ் இனத்தின் வரலாறு 3500 வருடங்களுக்கு முற்பட்டது. அன்று இலங்கைத்தீவு முழுவதும் தமிழர்களின் மூத்த குடிகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அதன் பின்னர் இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட விஜயன் என்ற அரச குமாரனும் அவனது எழுநூறு தோழர்களும் இத் தீவில் வந்திறங்கியதிலிருந்து தான் சிங்கள இனத்தின் வரலாறு ஆரம்பமாகியது. அதன் விளைவே தமிழ் இனத்தின் ஆளுகைப் பகுதிகளும், சிங்கள இனத்தின் ஆளுகைப் பகுதிகளும் வெவ்வோறாகத் தோன்றிய நிலை உருவாகியது. இவ்விரு இனங்களின் ஆளுகைப் பகுதிகள் பெரும் காடுகளைக் கொண்ட வனப் பகுதியால் பிரிக்கப்பட்டிருந்தது.



இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் பகுதிகள் தமிழர்களின் இராச்சியப் பகுதியாக அமைந்தது, மேலும் இலங்கையின் மேற்கு, தெற்கு, மத்திய பகுதிகள் சிங்களவர்களின் இராச்சியப் பகுதியாகவும் இருந்தது. இலங்கையின் இன்றைய வடக்கு மாகாணப் பகுதிகளான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களும் வடமேல் மாகாணத்தின் புத்தளம், சிலாபம் மாவட்டப் பகுதிகளும் தமிழர் தாயக நிலப்பரப்பாக இருந்தது. இன்றைய இலங்கையின் மேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் மாவட்டங்கள் சிங்களவர்கள் வாழும் நிலப்பரப்புகளாக அமைந்தன.

அன்று தமிழர் தாயக நிலப்பரப்பும், சிங்களவர் வாழ்ந்த நிலப்பரப்பும் வெவ்வேறாகவே பிரிக்கப்பட்டிருந்தது. இலங்கைத் தீவிற்கு ஆக்கிரமிப்பாளர்களாக 1505 இல் வருகை தந்த போர்த்துக்கேயர்கள், அதன் பின்னர் 1658இல் வருகை தந்த ஒல்லாந்தர்கள், அதன் பின்னர் 1796ல் வருகை தந்த ஆங்கிலே யர்கள் வெவ்வேறாக இருந்த தமிழர்கள், சிங்களவர்கள் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களால் ஒன்றிணைக்கப்பட்டு ஆளுகை செய்யப்பட்டு பின்னர் இலங்கைத் தீவை விட்டு வெளியேறியபோது, தமிழர் தாயகப் பகுதியும், சிங்களவர்களின் அதிக்கப் பகுதிகளும் ஒருங்கிணைந்த இலங்கைத் தீவாக சிங்களத் தலைவர்களிடம் ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்டதே இலங்கைத் தீவில் தமிழத் தேசியம் சிதைக்கப் படுவதற்குக் காரணமாக அமைந்தது.



இலங்கைத்தீவிற்குஆக்கிரமிப்பாளர்களாக 1505 இல் வருகை தந்த போர்த்துக்கேயர்கள், அதன் பின்னர் 1658இல் வருகை தந்த ஒல்லாந்தர்கள் அதன் பின்னர் 1796இல் வருகை தந்த ஆங்கிலேயர்கள் வெவ்வேறாக இருந்த தமிழர், சிங்களவர்களின் ஆளுகைப் பகுதிகளை ஒன்றிணைத்து தமது ஆளுகைக்கு உட்படுத்தினர். அந்த நிலை 1948 மாசி 04ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்தது வரை தொடர்ந்தது. இலங்கைக்கு சுதந்திரம் வழங்கி இலங்கையை விட்டு வெளியேறிய ஆங்கிலேயர்கள் ஒன்றிணைக்கப்பட்ட இலங்கைத தீவை சிங்களவர்களிடம் கையளித்து விட்டு சென்றனர்.

இலங்கையை ஆக்கிரமித்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் மற்றும் அவர்களால் வெளியிடப்பட்ட இலங்கைத் தீவின் வரைபடங்களும் தமிழர் தாயகப் பகுதிகளும், சிங்களர் ஆளுகைப் பகுதிகளும் வெவ்வேறாக இருந்ததையும் ஆளுகை செய்யப்பட்டதையும் உறுதிப்படுத்தியது. மேலும் இலங்கைத் தீவிற்கு வருகைதந்த வரலாற்று ஆய்வாளர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் தமிழ், சிங்கள இராச்சியப் பகுதிகள் வெவ்வேறாக அமைந்திருந்ததையும் உறுதிப்படுத்தின. மற்றும் தமிழர் தாயகப் பகுதியில் அமைந்திருந்த கலாச்சார சின்னங்களான சிவாலயங்களான திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், தொண்டீஸ்வரம், நகுலேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் மற்றும் முன்னேஸ்வரம் ஆகிய சிவாலயங்களும் அவற்றின் வரலாற்று குறிப்புகளும் தமிழர் தாயக நிலப்பரப்பை எடுத்துக் காட்டின. தமிழர் தாயகப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட வரலாற்றுத் தொன்மை மிக்க பொருட்களும், இன்னும் காணப்படும். வரலாற்றுச் சின்னங்களும், சிவாலயங்களும் தமிழர் தாயகத்தின் வரலாற்றுத் தொன்மையை தெளிவுபடுத்தியுள்ளது. இலங்கைத் தீவை ஐரோப்பியர்கள் ஆக்கிரமித்த போது சிங்கள மன்னர்கள் நிபந்தனையின்றி சரணடைந்ததும், தமிழ் மன்னர்கள் ஐரோப்பியர்களுக்கு எதிராகப் போராடி வீரச்சாவடைந்ததும், சிங்களவர்களின் ஆளுகைப் பகுதிகளும், தமிழர்களின் ஆளுகைப் பகுதிகளும் வெவ்வேறாக இருந்ததையும் உறுதிப்படுத்தியது

1948இல் இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இன்று வரை இலங்கைத் தீவை ஆட்சி புரிந்த சிங்களக் கட்சிகளும் அதன் தலைமைகளும் அவர் களுடன் இணைந்து செயற்பட்ட சிங்கள இன வாதிகளும், சிங்கள பௌத்த துறவிகளும் இலங்கைத்தீவை சிங்களபௌத்த நாடாக மாற்றுவதற் குரிய இலக்குடன் செயற்பட்டு வருவதை ஒவ்வொரு தமிழ் மகனும் புரிந்து கொள்ள வேண்டும்.



- **தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்தல்**
- **தமிழர் தாயகம் என்ற எண்ணக்கருவை அழித்தல்**
- **தமிழ்த் தேசியத்தை சிதைத்தல்**

என்ற நோக்க இலக்குடன் செயற்படும் இவர்கள், பல்வேறு செயற்திட்டங்களையும், செயற்திட்ட வடிவங்களையும் நடைமுறைப்படுத்தி, இலங் கைத் தீவில் தமிழத் தேசியத்தை சிதைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதை உணர முடிகின்றது.

இலங்கைத் தீவில் தமிழ் மொழியை அழித்து, தமிழர்களின் கலை பண்பாட்டை சீரழித்து, தமிழர் வரலாற்றைத் திரித்து, தமிழர் தாயக நிலப்பரப்பை ஆக்கிரமித்து தமிழ்த் தேசியம் என்ற எண்ணக்கருவை சிதைத்து அதனை அகற்றும் வகையில் சிங்கள இனவாதம் செயற்படுவதை அறிய முடிகின்றது.

அன்று தமிழர் தாயக நிலப்பரப்பும், சிங்களவர் வாழ்ந்த நிலப்பரப்பும் வெவ்வேறாகவே பிரிக்கப்பட்டிருந்தது.ஆரம்பத்தில் தமிழர் தாயகத்திற்கும் சிங்களவர் ஆதிக்கப் பகுதிக்கும் எல்லையாக இருந்த காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு, சிங்களக் குடியேற்றங்கள் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் தான் 1948இலிருந்து இன்று வரை 20,000 (இருபதாயிரம்) சதுர கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தமிழர் தாயக நிலப்பகுதியில் 8,000 சதுர கிலோ மீற்றர்களுக்கு மேற்பட்ட நிலப்பகுதியை தமிழர் தாயகம் இழந்திருக்கின்றது. அதாவது 40 சதவீதத்திற்கு மேற்பட்ட தமிழர் தாயக நிலப்பகுதிகள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக தமிழர் தாயகப் பகுதிகளை துண்டாடும் வகையில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் பல தீர்ப்பாசனத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போது தமிழ்ப் பெயர் களைக் கொண்ட குளங்களும், ஆறுகளும் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. ஆறுகள் 'ஓயாக்கள்' என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டதோடு, அவை ஓநாய்களாக மாறி தமிழ் மக்களை அழித்தன. இத் திட்டங்களை நிறை வேற்றும் வகையில் தமிழர் தாயகப் பகுதியில் சிங்கள அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இதன் மூலம் தமிழர்களின் அடையாளத்தை முற்று முழுதாக இல்லாதொழிக்கும் வகையில் செயற்திட்ட வடிவங்கள் உருவாக்கப்பட்டு இன்றும் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத் திட்டங்கள் யாவும் தமிழர் தாயகப் பகுதியில் தமிழர்களை சிறுபான்மை இனமாக மாற்றியதோடு, தமிழத் தேசியப் பிரதிநிதித்துவத்தையும் குறைத்தது. அத்துடன் தமிழர் தாயகப் பகுதியில் சிங்கள மாவட்டங்களும், சிங்களப் பிரதேச செயலர் பிரிவுகளும் உருவாக்கி தமிழர்களின் நிலப்பரப்பு குறைக்கப்பட்டது. இதன் மூலம் தமிழர் தாயகப் பகுதியில் சிங்களவர்களின் சதவீதம் அதிகரிக்கப்பட்டு தமிழர்களின் சதவீ தமும் குறைக்கப்பட்டது, இந்த நிலை தமிழ்த் தேசி யத்தை



சிதைக்கும் சிங்கள இனவாதத்தின் குறிக்கோளை தமிழ்த் தலைமைகளும் உலகத் தமிழினமும் புரிந்து, ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

**(இன்னும் வரும்)**

# பாதுகாப்பு அமைச்சும் சிவில் நிர்வாகமும்

பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றதன் மூலம் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அரசியலில் அதிகாரம் மிக்கவர்களாக மாறியிருக்கின்றார்கள். அந்த ஆட்சி அதிகாரத்தில் தாங்கள் நிகரற்றவர்களாகத் திகழ வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலத்தைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகின்றது.

இந்தப் பொதுத் தேர்தலின் மூலம் நாட்டில் ஓர் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாகி இருக்கின்றது. செயல் வல்லமையுள்ள ஓர் அரசாங்கம் உருவாகி இருக்கின்றது. முன்னைய அரசாங்கத்தில் நாடு அரசியல் ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ளப்பட்டிருந்தது. வாய்ப்பேச்சு இருந்ததேயொழிய அந்த ஆட்சியாளர்களிடம் செயல் வல்லமை காணப்படவில்லை. இதனால் நாட்டின் அரசியல் நிலைமை மோசமடைந்திருந்தது. பல வழிகளிலும் நாடு பின்னடைவைச் சந்தித்திருந்தது. குறிப்பாக ஜனநாயகம் ஒரு கட்டத்தில் கேலிக் கூத்தான நிலைமைக்குள் தள்ளப்பட்டிருந்தது என்று கூட குறிப்பிடத் தக்க நிலைமைக்கு நாடு ஆளாகியிருந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதமரை அதிரடியாகப் பதவி நீக்கம் செய்திருந்தார். தொடர்ந்து இரண்டு பிரதமர்கள் இருந்த ஒரு நிலைமை ஒன்று நாட்டில் உருவாகி இருந்தது. இதனால் அரசியலமைப்பை அப்பட்ட மாக மீறியிருந்த நிகழ்வும் முன்னைய ஆட்சியில் இடம்பெற்றிருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின்கீழ் இடம்பெற்ற இது போன்ற கேலிக்கூத்தான நிலைமைகளுக்கு 2020 பொதுத் தேர்தல் முடிவு கட்டியுள்ளது.

உறுதியான அரசாங்கத்தையும் உறுதி யான அரசியல் நிலைமையையும் நாட்டில் உருவாக்கியுள்ள இந்தப் பொதுத் தேர்தல் இனவாதப் போக்கில் பேரின மக்களின் பெரும்பான்மை பலத்தை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் ஒன்று உருவாகுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்றது. விகிதாசாரத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவது சாத்தியமற்றது என்ற நிலைப்பாட்டை இந்தத் தேர்தல் பொய்ப்பித்துள்ளது.

ஆனால் நாடாளுமன்றத்தில் பெற்றுள்ள அந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டு எதனையும் சாதித்துவிட முடியும் என்று ராஜபக்ஷக்கள் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எதனையும் சாதித்து விடலாம் என்பது நாட்டின் அனைத்து இன மக்களினதும் அரசியல், பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டதாக அமையவில்லை. மாறாக அது ஒற்றை ஆட்சியின் உச்சத்தைத் தொட்டுவிடுவதற்கான துடிப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ள விதமும், அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முறையும் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றது. நாட்டின் அரசியலை உறுதிப்படுத்துவதற்கு வழிசமைத்துள்ள போதிலும், இந்தத் தேர்தல் நாட்டின் ஜனநாயகத்தையும், பன்மைத்துவத்தைக் கொண்ட ஆட்சி முறைமையையும் சவாலுக்கு உட்படுத்தி விடுமோ என்று சந்தேகம் கொள்ளவும் செய்திருக்கின்றது.

அரசியலமைப்புக்கு முரணான செயற்பாட்டையும் இராணுவ மயமான ஆட்சி நிர்வாக நடவடிக்கைகளுக்கான ஆரம்பத்தையும் புதிய அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையிலேயே அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றிருப்பதும், உள்நாட்டலுவல்கள் அமைச்சை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான செயற்பாடும் அமைச்சரவை உருவாக்கத்தின் போது இடம்பெற்றிருக்கின்றன.

**பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு**

பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதி எந்தவொரு அமைச்சுப் பொறுப்பையும் ஏற்க முடியாது என்பது அரசியலமைப்புச் சட்ட விதி. ஜனாதிபதியென்ற பதவி வழியாக முப்படைகளினதும் தளபதியாக உள்ள போதிலும், பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை அவர் ஏற்பதற்கு சட்டம் அனுமதிக்கவில்லை. அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்களை அவர் பொறுப்பேற்பதற்கு சட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் அமைச்சுப் பொறுப்பை ஏற்பதற்கு சட்டத்தில் இடமில்லை. இதனை அரசியலமைச்சு சட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டி இருக்கின்றார்கள்.

இந்த விடயம் குறித்த சர்ச்சையில் சட்டத்தரணிகள் சிலர் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பை ஜனாதிபதி ஏற்பதில் சட்ட ரீதியான முரண்பாடு இல்லை என கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

பி.மாணிக்கவாசகம்

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்க முடியும். சட்ட ரீதியாக அதற்கு இடமுண்டு என்றால், கடந்த வருடம் நவம்பர் மாதம்



நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருக்கலாம். ஏற்றிருக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றபோது நாட்டின் பாதுகாப்பு குறித்த கவனமும், கரிசனையும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றிருந்தது. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களையடுத்து, முன்னைய ஆட்சியில் நாட்டின் தேசிய பாதுகாப்பு கேள்விக் குறிக்கு உள்ளாகியிருந்தது.

பாதுகாப்பு மற்றும் இராணுவ விவகாரங்களில் தீவிர அக்கறையும் கவனமும் கொண்டிருப்பவர்களாகிய ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இல்லாத காரணத்தினாலேயே 2019 ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பிலும், நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் தொடர்ச்சியாகத் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் இடம் பெற்றன என்ற பொதுவான கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி தேர்தலையொட்டி இந்தக் கருத்து தேர்தல் பிரசாரத்திலும் இடம்பெற்றிருந்தது.

இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிகளின் உயிர்களைக் குடித்து பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்பை எற்படுத்திய அந்தக் குண்டு வெடிப்புக்கள் பற்றிய விசாரணைகள் முற்றுப் பெறாத நிலையில் தேசிய பாதுகாப்பு குறித்த கரிசனை அரசியல் ரீதியாக மேலோங்கி இருந்தது.

அத்தகைய ஒரு சூழலில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தாபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் சகோதரர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததுடன், தனக்கு இசைவான பணி ஓய்வு பெற்ற இரா ணுவ அதிகாரியாகிய மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமித்திருந்தார். பாதுகாப்பு அமைச்சர் என எவரும் நியமிக்கப்படவில்லை. அந்த அமைச்சுப் பொறுப்பை அவர் ஏற்கவுமி ல்லை.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட போது உருவாக்கப்பட்ட காபந்து அரசாங்கத்திலும் பாதுகாப்பு அமைச்சுப் பதவி எவருக்கும் வழங்கப்படவில்லை. ஆனால் பொதுத் தேர்தலில் மூன்றிரண்டு பெரும்பான்மை பலத்துடன் வெற்றியீட்டியதையடுத்து. அமைச்சரவை உருவாக்கப்பட்ட போதே அந்தப் பதவிப்பொறுப்பை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷதனதாக்கியுள்ளார்.

**யுத்தகால சிவில் நிர்வாகம்**

அதேவேளை, உள்நாட்டலுவல்கள் அமைச்சை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான புதிய அரசாங்கத்தின் நடவடிக்கையும் சர்ச்சைக்குரிய விடயமாகி உள்ளது. சிவில் நிர்வாகம் என்பது சிவில் மயமானதாக இருத்தல் அவசியம். அது பொது மக்களுடன் நேரடியாகத் தொடர்புள்ள செயற்பாடாகும். அதனை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதென்பது, அந்தத் துறையை இராணுவமயப்படுத்துவதாகவே அமை யும்.

சிவில் நிர்வாகம் சுதந்திரமானதாக அதன் சட்டதிட்டங்கள், நெறிமுறைகளுக்கு அமைவாகக் கொண்டு நடத்தப்பட வேண்டிய ஒன்று. அதனை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்து, இராணுவ மேற்பார்வையில் கொண்டு நடத்துவதென்பது பொதுமக்களைப் பாதிக்கவே செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழேயே மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட நிர்வாக அலகுகள் செயற்படுகின்றன காலங்காலமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சும், அதன் கீழுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களும் சிவில் நிலைமைகளிலேயே செயற்பட்டு வந்துள்ளன.

யுத்த மோதல்கள் இடம்பெறுகின்ற நெருக்கடியான ஒரு சூழலில் வேண்டுமானால் சிவில் நிர்வாகப் பொறுப்புக்கள் இராணுவ அதிகாரிகளின் கீழ் செயற்படுத்தப்படலாம். ஏனெனில் ஆயுத மோதல் சூழலில் சிவில் நிர்வாகிகள் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. அவர்களின் சுயபாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கும். அத்துடன் அவர்கள் மோதல்கள் இடம்பெறுகின்ற ஒரு சூழ




லில் பாதுகாப்புடன் செயற்பட முடியாதிருக்கும். இதனால் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்து செயற்படுத்த வேண்டிய அவசியமும் தேவையும் உருவாகி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப்புலிகளுக்கும், அரசபடைகளுக்கும் இடையில் ஆயுத மோதல்கள் தீவிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் யுத்த மோதல் பிரதேசங்களில் சிக்கி இருந்தார்கள். அப் போது சிவில் நிர்வாகம் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது. யுத்தப் பிரதேசத்து மக்களின் அத்தியாவசிய தேவைகள், அவசரத் தேவைகள் என்பவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்புமே சிவில் நிர்வா

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# நம் எதிர்காலம் கையில்!

பகுதி 01

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் **பெ. மணியரசன்**

**இலங்கையில் நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள மனநிலை குறித்தும், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தியாவிலுள்ள தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன் அவர்கள் எமது 'இலக்கு' ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேகமான நேர்காணல் வடிவம்.**

**கேள்வி:**

**இலங்கைக்குள் எமது மக்களுக்கான அரசியல் தீர்வு சாத்தியமாற்றுப் போய்விட்ட அரசியல் சூழ்நிலையில் ஈழத்தமிழர்களுக்குள்ள வேறு தெரிவுகள் குறித்து உங்கள் பார்வை என்ன?**

**பதில்:**

அண்மையில் (2020 ஆகத்தில்) நடந்த இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து, 'அரசியல் தீர்வு' என்பது நிரந்தரமாக சாத்தியமற்றுப் போய்விட்டது என்ற முடிவுக்கு வரக் கூடாது. நமக்கான அரசியல் தீர்வு என்பது இலங்கை நாடாளுமன்றத்திற்கு நடைபெறும் தேர்தல் வழியாக வருவது அல்ல. ஈழத்தமிழர் தாயகத்தில் – அதாவது வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் கருத்து வாக்கெடுப்பு வழியாக வருவதாகும்!

இன்றைய இலங்கை என்ற 'நாட்டு வடிவம்' சிங்கள ஆக்கிரமிப்பாளர்களாலும், ஐரோப்பியக் காலனி ஆதிக்கவாதிகளாலும் உருவாக்கப்பட்டது. இந்த இலங்கைக்குள் தமிழ் ஈழம் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் செயற்கையாகச் சிறுபான்மை ஆக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழர் தாயகமான தமிழீழத்தில் தமிழர்கள் பெரும்பான்மையினர்; சிங்களர் சிறுபான்மையினர்!

ஆக்கிரமிப்பாளர்களால் செயற்கையாகச் சிறுபான்மை ஆக்கப்பட்ட இனங்கள் உலகெங்கும் இருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள எட்டுக் கோடி தமிழர்களும் அப்படித்தான் செயற்கையாகச் சிறுபான்மை ஆக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் மக்கள் தொகை பிரித்தானியா மக்கள் தொகையை விட – பிரான்சு மக்கள் தொகையைவிட அதிகம்!

உலகெங்கும் பார்த்தால், இவ்வாறு சிறுபான்மை ஆக்கப்பட்ட தேசிய இனங்கள், போராடிப் போராடி விடுதலை பெற்று வருகின்றன.

எத்தியோப்பியாவில் சிக்கிக் கொண்டிருந்த எரித்திரிய தேசிய இனம் தனது எரித்திரிய தாயகத்திற்குள் நடந்த கருத்து வாக்கெடுப்பில் மிகப் பெரும்பான்மை பெற்று, 1993இல் விடுதலை அடைந்தது.

இந்தோனேசியாவின் ஆக்கிரமிப்பில் இருந்த 'சிறுபான்மை' கிழக்குத் திமோர் மக்கள், 1999இல் உலகநாடுகளின் மேற்பார்வையில் கிழக்குத் திமோருக்குள் மட்டும் நடந்த கருத்து வாக்கெடுப்பில் பெரும்பானமை பெற்று விடுதலை அடைந்தனர்.

சூடானில் 'சிறுபான்மை' ஆக்கப்பட்ட தெற்கு சூடானியர்–2011இல் தங்கள் தாயகத்திற்குள் மட்டும் நடந்த கருத்து வாக்கெடுப்பில் பெரும்பான்மை பெற்று வடக்கு சூடானியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றனர்.

எரித்திரியா, கிழக்குத் திமோர், தெற்கு



சூடான் ஆகியவற்றில் விடுதலைக்காக ஆயுதப் போர் நடந்தது. அதனால்தான் கருத்து வாக்கெடுப்பு நடந்தது. தமிழீழத்தில் ஆயுதப்போர் முடிந்து விட்டதே, இங்கு எப்படி கருத்து வாக்கெடுப்பு வரும் என்று கருதக்கூடாது.

உலகத்தின் இருபெரும் வல்லரசுகளில் ஒன்றாக விளங்கிய சோவியத் ஒன்றியம் 1990 – 1991இல் 15 நாடுகளாகப் பிரிந்ததற்கு ஆயுதப் போராட்டங்களோ, கருத்து வாக்கெடுப்புகளோ அடிப் படைக் காரணமல்ல; அங்கெல்லாம் இரசிய இன மேலாதிக்கத்தால் – இரசிய மொழி ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்களின் மக்கள் எழுச்சி ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையில் எழுந்தது. இரசிய வல்லரசுக்கு எதிராக இருந்த வட அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் ஆதரவு அந்த மக்களுக்குக் கிடைத்தன. பதினைந்து தேசிய இன நாடுகள் இறையாண்மையுடன் பிரிந்தன. செக்கஸ்லோவோக்கியா எந்தப் போராட்டமும் குருதி சிந்தலும் இல்லாமலே இரு நாடுகளாகப் பிரிந்தது.

பிரித்தானியாவிலிருந்து பிரிய வேண்டும் என்று அண்மைக்காலத்தில்தான் ஸ்கொட்லாந்தியர் விடுதலை முழக்கமெழுப்பினர். அவர்களின் கோரிக்கையை ஏற்று 2014இல் பிரித்தானிய அரசு ஸ்காட்லாந்தில் மட்டும் கருத்து வாக்கெடுப்பு நடத்தியது. குறைந்த வாக்கு வேறுபாட்டில் ஸ்காட்லாந்து விடுதலை இயக்கத்தினர் தோல்வி கண்டனர். ஆனால், எதிர்காலத்தில் நடைபெறும் இன்னொரு கருத்து வாக்கெடுப்பில் அல்லது வேறொரு ஏற்பாட்டில் ஸ்காட்லாந்து பிரியும் வாய்ப்பு உண்டு!

இரண்டாம் உலகப் போர் ஏற்படுத்திய பன் னாட்டு நெருக்கடியைப் பயன்படுத்தி, புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் வட அமெரிக்காவின் உதவியோடு உருவாக்கியது தான் இசுரேல் என்ற யூதர்களுக்கான நாடு! தமிழீழம் அமைவதற்கு, புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் காத்திரமான பங்களிப்பு செய்ய வேண்டியிருக்கிறது என்ற பொறுப்புணர்வை தமிழர்கள் அனைவரும் பெறவேண்டும்.

உலக ஆதிக்க நாடுகளிடையே முரண்பாடுகள் வரும் போதும், அண்டை நாடுகளில் மாற்றங்கள் ஏற்படும்போதும், தமிழீழத்திற்கான கருத்து



வாக்கெடுப்போ அல்லது வேறு ஏற்பாடோ தமிழர்களுக்குத் தனிநாடு பெற்றுத்தரும். அதுவும் அரசியல் தீர்வே!

உலகெங்கும் தாயக இறையாண்மைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசிய இனங்கள் நூற்றுக்கும் மேல் இருக்கின்றன. நாம் தனியே இல்லை என்பதைத் தமிழர்கள் உணர வேண்டும்.

**கேள்வி:**

**எல்லாமே கைமீறிப் போய்விட்டதான ஒரு ஏமாற்றமும் விரக்தியும் எம் மக்களிடம் இந்தத் தேர்தலுக்குப் பின்னால் ஏற்பட்டிருப்பதான ஒரு பார்வை மேலெழுந்து நிற்கிறது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:**

அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவால் எல்லாமே கைமீறிப் போய் விட்டதாக நினைக்க வேண்டியதில்லை. இராசபட்சே குடும்பம் தோற்று, இரணில் கட்சியோ அல்லது சஜித் பிரேமதாசா கட்சியோ, அல்லது புதிய கூட்டணி ஒன்றோ வென்று அரசு அமைந்திருந்தால் எல்லாமே ஈழத்தமிழர்களின் கையடக்கத்திற்குள் வந்திருக்குமா?

தமிழர் தாயகத்தை மறுப்பதில், வடக்கு கிழக்கை இணைக்க மறுப்பதில், இலங்கையின் எதேச்சாதிகார ஒற்றையாட்சி முறையைக் கூட்டாட்சியாக மாற்ற மறுப்பதில், வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தைத் தீவிரப்படுத்துவதில், சிங்களத் திணிப்பைத் தீவிரப் படுத்துவதில் மேற்கண்ட மூன்று பிரிவினர்க்கும் இடையே வேறுபாடு உண்டா? இல்லை!



சம்பந்தரின் தமிழ்த் தேசியக் கூட்டணி மீண்டும் 16 இடங்களை அல்லது அதற்கும் மேலாகப் பெற்றிருந்தால், தமிழர் உரிமைகளை மீட்டுத் தருமா? குறைந்தது, ஐ.நா. மனித உரிமை மன்றம் 2015இல் நிறைவேற்றிய போர்க் குற்றங்களுக்கான உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கலப்பு புலனாய்வு மன்றம் அமைக்க வலியுறுத்திப் பெற்றுத் தருவாரா? நடக்காது; நடக்காது!

புதிதாக உருவாகி வரும் தமிழர் சனநாயக எழுச்சியைப் பாருங்கள்! கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் 'தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி' கட்சி இரண்டு இடங்களையும், விக்னேஸ்வரன் அவர்களின் 'தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி' கட்சி ஓர் இடமும் பெற்றுள்ளன. இவ்விருவர் கட்சிகளும் தோற்ற தொகுதிகளில் கூட கணிசமாக அதிக வாக்குகளைப் பெற்றுள்ளனர். தமிழ் ஈழத்தமிழர்களிடையே சனநாயக எழுச்சி

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# நோர்வேயின் பூர்வீகக் குடிகளை அழித்தொழிக்கும் பசுமைக் காலனியம்

**பகுதி 03**

மனிதர்களுக்கும் நிலம், நீர் போன்ற மனிதர் அல்லாத உறவுகளுக்கும் இடையேயான பரஸ்பர தங்கியிருக்கும் பண்பு, சாமி இனத்தவரின் உலகக் கோட்பாட்டுக்கும் பாரம்பரிய நடை முறைகளுக்கும் இன்றியமையாததாகும்.

நீடித்து நிலைக்கக்கூடிய உணவு உற்பத்தி, சமூகங்களின் இடர் தாங்குதிறன், நிலப்பயன்பாடு போன்ற உலகளாவிய பிரச்சினைகளுக்கு, செயற்றிறன் மிக்க தீர்வுகளைக் காணும் செயற்பாடுகளில் பரஸ்பரம் தங்கியிருக்கும் இந்தப் பண்பு முக்கியமான இடம் வகிக்க வேண்டும்.



பெரும்பான்மை இனச்சமூகங்களினால் முன் னெடுக்கப்படும் சனநாயகச் செயன்முறைகள் பூர்வீகக் குடிகளின் எதிர்பார்ப்புகளை உள்வாங்கத் தவறும் பட்சத்தில், மிக அதிக செலவினத்தை ஏற்படுத்தக்கூடிய வழக்குகளைத் தொடர்வதே, சாமி இனக் குழுமத்துக்கு தற்போது இருக்கின்ற ஒரேயொரு தெரிவாகும். ஆனால், அடிப்படையில், இந்த முரண்பாடுகள் தனியே சட்டரீதியான முரண்பாடுகள் மட்டுமல்ல. எமது சமூகங்களை நாங்கள் ஒழுங்கமைக்கும் போது நாம் பயன்படுத்தும் அடிப்படைக் கொள்கைகளையே நாம் கேள்வி கேட்க, இந்த முரண்பாடுகள் எம்மைத் தூண்டுகின்றன.

ஜில்லென் நியார்க்க, போவ்சென் நியார்க்க போன்ற சமூகங்களின் பாரிய உரிமை மீறல்களைக் கருத்தில் எடுக்கும் போது, நாம் ஒரு சமூகம் என்பதன் அடிப்படையில் எங்களைப் பற்றி அது என்ன செய்தியைச் சொல்கிறது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

காலநிலையைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் பூர்வீகக் குடிகளின் பண்பாடுகள் பலியிடப்படும் போது எப்படிப்பட்ட ஒரு மனித சமூகத்தைக் கட்டிக்காக்க நாங்கள் பாடுபடுகிறோம் என்று எண்ணத் தோன்றுகிறது. காலநிலைக்கான நிகழ்ச்சிநிரலில் இருந்து மனித மற்றும் பூர்வீகக் குடிகளின் உரிமைகளை ஓரங்கட்டுவது என்பது ஒரு பரந்த விடயமாகும்.

இரண்டாயிரத்து இருபது பெப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட “நோர்வே நாட்டின் இற்றைப்படுத்தப்பட்ட பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்துக்கான அர்ப்பணம”; என்ற ஆவணம், இவ் விடயங்கள் தொடர்பாக பூர்வீகக்குடிகளைக் கலந்தாலோசிக்க வேண்டியதன் அவசியத்தை மிகவும் அரிதாகவே குறிப்பிடுகிறது.

செயன்முறையில், பசுமைக் காலனியத்துக்கு நோர்வே அரசு வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவைப் பார்க்கும் போது, காலநிலைச் செயற்பாடு களின் முன்னோடி என்ற வகையிலும் பூர்வீகக் குடிகளின் உரிமைகளின் பாதுகாவலன் என்ற வகையிலும் நோர்வே நாடு காண்பிக்கும் விம்பம் பெயரளவில் இருப்பதாகவே தோன்றுகி ன்றது.

தமிழில் **ஜெயந்திரன்**

இப்படிப்பட்ட ஏமாற்றும் மூலோபாயங்கள் காலனித்துவ நாடுகளின் தனித்துவமான இயல்பாகும். நிர்மாண வேலைகளுக்கான அனுமதியை வழங்க முதல் ஜிலேன் நியார்க்க குழுமத்தைச் சார்ந்த கலைமான் மேய்ப்பர்களுடன் கலந்தாலோசனை நடத்தப்பட்டது என்று எழுத்தில் குறி ப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒரு காற்று வலுத்தொகு தியை பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த மேய்ப்பர்கள் உண்மையில் விரும்பினார்களா என்பதை அரசோ அன்றேல் அபிவிருத்தியாளர்களோ கருத்திற் கொள்ள வில்லை.




மேய்ப்பர்களைப் பொறுத்தவரை அழிவை ஏற்படுத்தக்கூடிய இரண்டு தெரிவுகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

கலந்தாலோசனையைப் பொறுத்தவரையில், இடது காலிலா அல்லது வலது காலிலா சுடப்படு வதை தெரிவு செய்வது போன்றே இருந்தது என்று ஹய்க்கா தெரிவித்தார். அரசு, ‘எயோலுஸ் வின்ட்’ மற்றும் அவர்களது சட்டத்தரணிகள் போன்ற அனைவரது செயற்பாடுகளும் சனநாயக விழுமியங்களுக்கு எதிரானவையாகவே இருந்தன என்று அவர் மேலும் கூறினார்.

மின்வலுவினால் இயக்கப்படும் மகிழுந்துகளையும் வரையறுக்கப்பட முடியாத புதுப்பிக்கப்படக்கூடிய சக்தியினால் இயக்கப்படும் அதிவேக தொடருந்துகளையும் கொண்ட நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு அதிசய பூமியை உருவாக்குவதாக பசுமைச் சக்தித் தொழில் வாக்குறு தியளிக்கிறது.

அதிகூடிய சக்தியை உள்ளடக்கும் ஓர் வாழ்க்கை முறைக்கு நாம் என்றுமே அடிமைகளாக இருக்கலாம் என்ற மிக ஆபத்தான எண்ணத்தை இது வலுப்படுத்துகிறது.

சாமி இனக்குழுமங்கள் வாழுகின்ற பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள காற்றுச் சக்திப் பிரிவு ஒரு பிரித்தெடுக்கும் தொழிலாகும் என் துடன் நாமும் அதை அப்படித்தான் நோக்க வேண்டியிருக்கிறது.



புதுப்பிக்கக்கூடிய சக்தியென்பது நோர்வேயிலும் ஏனைய நாடுகளிலும் உருவாகும் ஒருவகையான அடக்குமுறையென்பதை இனியாவது நாங்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். மேலும் மேலும் அதிக இலாபத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்படுகின்ற புதுப்பிக்கக்கூடிய சக்தியை உருவாக்கும் நிறுவனங் களின் கைகளில் பசுமையான எதிர்காலத் துக்கான திறவுகோல் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்குப் பதிலாக பல நூற்றாண்டுகளாக எமது சுற்றுச்சூழலைப் போஷித்துப் பாதுகாக்கின்ற பூர்வீகச் சமூகங்களுடன் நாம் இணைந்து செயற்படுவது அவசியமாகும்.

பூர்வீகக் குடிகள், கறுப்பின மக்கள், ஏனைய நிறத்தவர்கள் மட்டில் மிக அதிகளவில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கால நிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ஒரு ஆபத்து நிறைந்த காலகட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். பசுமையான ஒரு வாழ்க்கை முறையை நாங்கள் ஏற்படுத்துவதற்கு காலநிலை நீதியையும், நீதியான மாற்றத்தையும் உறுதிப்படுத்தும் அவசரத் தேவை இருக்கிறது.

வெறுமையான ‘பசுமை’ சுலோகங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை விடுத்து நீதி என்பதற்குப் பொருள் என்ன என்பதையும் யாருக்கு அது தேவை என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை அவதானமாகக் கேட்பதிலும் காலனித்துவத்துக்கு எதிராகப் பல்வேறு முனைகளில் நடத்தப்படும் போராட்டங்களுக்கு உருப்படியான ஆதரவைக் கொடுப்பதிலுமே இது தங்கியிருக்கிறது.

**முற்றும்**

**நன்றி- *Al Jazeera***




# 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' – மாலியில் பிரான்சு முன்னெடுத்துள்ள நவகாலனீய நடவடிக்கை

பிரான்சு நாட்டின் ஆதரவுப் பின்புலத்துடன் ஆபிரிக்காவின் மாலியில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கல், பிரான்சு நாட்டின் பொருண் மிய ஈடுபாடுகளைப் பாதுகாப்பதையே இலக்கா கக் கொண்டது மட்டுமன்றி, மாலியின் உள்நாட்டுப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியிருக்கிறது,

ஜோர்ஜ் ஓர்வெல் *(George Orwell) 1984*இல் வெளியிட்ட நூலில் "கடந்த காலத்தைக் கட்டுப் படுத்துபவர் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்துகிறார். நிகழ்காலத்தைக் கட்டுப்படுத்துபவர் கடந்த காலத் தைக் கட்டுப்படுத்துகிறார்" என்று குறிப்பிடுகிறார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் இஸ்லாம் சமயத் தின் வரலாற்றை எந்த ஒரு பக்கமும் சாயாது, சீரான முறையில் பார்த்தோமானால், அந்த தேடல் பல விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதைக் காணலாம். முக்கியமாக மாலி மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளின் வரலாற்றை பார்க்கும் போது இவ்விடயம் மிகவும் அதிகம் புலனாகும்.

உலக வரலாற்றில் மிக அதிகமாகப் பட் டொளி வீசிப்பறந்த இரண்டு இஸ்லாமியப் பேரரசு களை இந்த இரு நாடுகளும் தன்னகத்தே கொண்டி ருந்தன. இவற்றில் ஒன்று பதின்நான்காம் பதினை ந்தாம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் இலங்கிய 'மன்சா மூசா' ப் பேரரசும் *(Mansa Musa)* மற்றை யது உத்மான் டொன் பாடியோவின் *(Uthman don Fadio)* பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'சொக்கொட்டோ கலிபேற்' *(Sokoto Caliphate)* என அழைக்கப்பட்ட இஸ்லாம் பேரரசும் ஆகும்.



இஸ்லாம் சட்டம், இலக்கியம், விஞ்ஞா னங்கள், புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க மேற் கொள்ளப்படும் பயணங்கள் என்பன மேற்குறிப் பிடப்பட்ட இரு ஆளுமைகள் ஊடாகவே ஆபிரிக் கக் கண்டம் முழுவதும் பரவின என்பதற்கு மாலியின் 'திம்புக்ற்று' *(Timbuktu)* நகரில் கண்டெ டுக்கப்பட்ட ஆவணங்கள் சான்றுபகர்கின்றன. அது மட்டுமன்றி இவர்களின் கால த்தில் ஏனைய மறைகள் மதிக்கப்பட்டது மட்டுமன்றி பாதுகாக் கப்பட்டன என்பதும் தெளிவாகிறது.

**ஆபிரிக்காவின் இஸ்லாம் மறை தொடர்பான வர லாறு மீளெளுகிறது**

பல்வேறு தடைகளுக்கு நடுவிலும் இஸ் லாம் மறை, ஆபிரிக்காவில் அடைந்த வளர்ச்சி தொடர்பான வரலாறு மீண்டும் வெளிவந்து கொண் டிருக்கும் விடயம், ஐரோப்பாவை மையமாக வைத்து வரலாற்றை எழுதும் அணுகுமுறையை மீள்பரிசீலனை செய்ய எம்மைத் தூண்டுகிறது.

தமிழில் **ஜெயந்திரன்**

மன்சா மூசாவுக்குப் பின்னர் மாலிப் பேரரசை ஆட்சி செய்த, புத்தம்புது நாடுகளைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வங்கொண்ட அரச னாகிய இரண்டாவது மன்சா அபூபக்கரி யின் *(Mansa Abubakari II)* தலைமையில் மேற்கொள் ளப்பட்ட இரு பெரும் கடற்பயணங்கள், கொலம்பஸ் அமெரிக்காவை அடைவதற்கு 181 ஆண்டுகளுக்கு முன்னரேயே அந்த நாட்டைச் சென்றடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆபிரிக்க கரிபிய அடிமைகளுக்கு முஸ்லிம் வேர்கள் இருக்கின்றன என்ற விடயம் மற்றும் 'நீலங்கள்' என அழைக்கப்படும் கறுப்பின அமெரி க்கர்களின் இசைவடிவத்தில் இருக்கும் இஸ்லாம் மறையின் தாக்கம் போன்ற வியப்பைத் தரும் விடயங்களை நாம் புரிந்துகொள்ள இந்த சான்றுகள் துணை புரிகின்றன.

ஆரம்ப அமெரிக்கச் சட்டத்தின் உருவாக்கத் திலும், அடிமைத்தனத்தை ஒழிக்க அங்கே ஒலித்த குரல்களிலும் இஸ்லாம் ஒரு மிக முக்கிய பங்கை வகித்தது என்பதை அமெரிக்காவில் அண்மையில் நடத்தப்பட்ட கல்வியியல் ஆய்வுகள் வெளிப்படு த்தியிருக்கின்றன.

அதேவேளையில் மேற்குலகம் முன்னெடு க்கும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போரைப்' பொறுத்தவரையில், மாலி ஒரு முக்கியமான மைய மாகக் கருதப்படுகிறது. புகழ்பூத்த இந்த கடந்த காலத்துக்குச் சான்று பகர்கின்ற திம்புக் கற்று ஆவணங்களும் அது தொடர்பான அறிவுப் பொக் கிசமும் இந்தப் பயங்கரமான போரின் நடுவில் அகப்பட்டு அழியும் ஆபத்தில் இருக்கின்றன.

**பிரான்சின் காலனித்துவமும் துவாரெக் மக்களின் போராட்டமும்**

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரின் மூலகாரணங்களை ஆழமாக உற்று நோக்கும் போது, நாட்டின் வடபிரதேசங்களில் வாழ்கின்ற சமூகங்களை, குறிப்பாக ஏழாம் நூற்றா ண்டில் இஸ்லாம் மறையைத் தழுவி ஆபிரிக்கா வின் வடபகுதி முழுவதும் அந்த மறையைப் பரப்பிய துவாரெக் *(Tuareg)* என அழைக்கப்படும் நாடோடிகளாக வாழும் பேர்பர் *(Berber)* மக்களை யும் நாம் புறந்தள்ளிவிட முடி யாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத் தில் பிரான்சு நாடு இப்பிரதேசத்தை காலனித்துவப் படுத்திய போது துவாரெக் குழும முஸ்லிம் மக்கள் மிகவும் பயங்கரமான எதிர்ப்பைக் காட்டியதோடு பல முக்கிய போர்களிலும் வெற்றியடைந்திருந் தார்கள். ஆனால் இறுதியில் பிரான்சு நாட்டின் ஆயுத பலத்துக்கு அவர்கள் அடி பணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பிரான்சின் தலைமையில் குறிப்பிட்ட பிர தேசங்கள் துண்டாடப்பட்டமை, வெளிநாட்டு ஆட்சி, வெளிநாட்டுப் பொருண்மிய ஒழுங்குகள் என்பவற்றுடன் வடக்குப் பிரதேசங்களில் நடை பெற்ற பாலைவனமாக்கல் போன்ற செயற்பாடு கள், அந்த மக்களை வறுமையின் பிடிக்குள் தள்ளிய துடன் இன்றுவரை நீடிக்கும் இனப்பிரச்சினை களுக்கும் காரணமாக அமைந்திருக்கின்றன.



அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர், இந்தப் போர் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற வரை யறைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிபுணர் கள் குறிப்பிட்டுள்ளது போன்று துவாரெக் பிரச் சினை தனியே 'இஸ்லாமியவாதிகளின்' பிரச்சினை யல்ல. அரசாங்கத்துக்கும் பிரெஞ்சு காலனித்துவத் துக்கும் எதிரான உணர்வுகள் தனியே முஸ்லிம் மக்களுக்கு மாத்திரம் உரியவை எனக் கொள்ள முடியாது.

ஆனால் இந்த உணர்வுகள் வடபிரதேசத்தில் உள்ள மற்றைய மக்களினங்களுக்கும் பொதுவா னவை என்பதுடன் இவை அந்த மக்களுக்கு இழை க்கப்பட்டிருக்கும் அநீதிகளை அடிப்ப டையாகக் கொண்டவை என்பதும் கருத் திலெடுக்கப்பட வேண்டும்.

உலகவங்கியின் தரவுகளின் படி, மாலி யில் வாழும் மக்களில் 44 வீதமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள். அப்பிரதேசங் களில் குவிந்திருக்கின்ற இயற்கை வளங்களைப் பார்க்கும் போது இது உண்மையில் பரிதாபத்துக் குரிய ஓர் விடயமாகும்.

**உலகளாவிய நுகர்வோர் கலாச்சாரத்தால் தூண்டப் பட்ட ஒரு போர்**

பிரான்சு நாடு இப்பிரதேசத்தில் காட்டும் ஆர்வம் முக்கியமாக பொருண்மியத்தை மையமா கக் கொண்டது.

இப்பிரதேசத்திலுள்ள எண்ணெய் மற்றும் யுரேனிய வளங்களைப் பாதுகாப்பதே அங்கு மேற் கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளின் நோக்கமாகும். நுகர்வோரின் தேவைகளைத் தொட ர்ந்து பூர்த்தி செய்ய இவை அவசியமானவையாகும்.

**தொடரும் ----**

**நன்றி- *TRT World***



# மாலி மக்களின் கோரிக்கைகளை ஐ.நா கருத்தில் கொள்ளவில்லை

தமிழில் **பிரபா**

நள்ளிரவு வேளையில் ஆயுதம் தாங்கிய சிப்பாய்களால் கைது செய்யப்பட்ட மாலி நாட்டின் அரச தலைவர் இப்ராகீம் போபாகர் கெயிறா (75) சில மணி நேரத்தின் பின்னர் தேசிய தொலைக் காட்சியில் தோன்றி தனது பதவியை துறப்பதாக வும், தனக்கு இவ்வளவு நாளும் ஆதரவு தந்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்த உரையின் போது அவர் கோவிட்-19 பாதுகாப்பு முகக்கவசம் அணிந் திருந்தார்.

எனக்கு வேறு வழி தெரியவில்லை. எனவே அரசையும், நாடாளுமன்றத்தையும் கலைக்கிறேன். உயிர்கள் இழக்கப்படுவதை தடுப்பதற்காகவே நான் இந்த முடிவை எடுத்தேன். இதன் மூலம் இரத்தம் சிந்தப்படுவதை தவிர்க்கலாம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.



கடந்த செவ்வாய்கிழமை (18) அதிகாலை அரச தலைவர் இல்லத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர், அவரை அங்கிருந்து வெளியேற்றினர். பல உயர் அரச அதிகாரிகளையும் கைது செய்திருந் தனர். தம்மை, மக்களை மீட்கும் தேசிய சபை என தெரிவித்த சிலர் இராணுவ உடைகளுடன் தொலைக்காட்சியில் தோன்றி தேர்தல் நடைபெறும் வரையில் இடைக்கால அரசின் பொறுப்பை ஏற்பதாக தெரிவித்தனர்.



நாட்டில் இடம்பெறும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவந்து அமைதியை ஏற்படுத்து வோம். நாம் அதிகாரத்தை கைப்பற்றப்போவதில்லை. ஆனால் நாட்டின் உறுதித்தன்மையை ஏற்படுத்தப் போகின்றோம் என நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கேணல் மேஜர் இஸ்மேல் வாகே தெரிவித்துள்ளார்.

இதனை நாம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கால எல்லைக்குள் மேற்கொள்ள முடியும். பெதுத் தேர்தல் மூலம் தான் நாம் நம்பிக்கையையும், மக்களின் நல்வாழ்வையும் ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரச தலைவர் தொலைக்காட்சியில் தோன்றி தனது பதவியை துறப்பதற்கு முன்னரே அனைத்துலக நாடுகள் தமது கண்டனங்களை வெளியிட ஆரம்பித்து விட்டன. மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பு மாலியில் கடந்த சில வாரங்களாக மேற்கொண்ட அமைதி முயற்சிகள் பலன் தரவில்லை.

கடந்த சில வாரங்களாக எதிர்க் கட்சிகள் அரசுக்கு எதிராக மிகப்பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வந்தன. அரச தலைவர் பதவி விலக வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை.

எனினும் தற்போதைய இராணுவப் புரட்சியை ஆபிரிக்க கூட்டமைப்பு கண்டித்துள்ளதுடன், பொருளாதார தடைகளை கொண்டுவரப் போவதாகவும், தரை மற்றும் வான் வழியான வியாபாரநகர்வுகளைதடை செய்யப்போவதாகவும் அது மிரட்டியுள்ளது. மாலியின் உறுப்புரிமையையும் அது நீக்கியுள்ளது. கைது செய்யப்படுள்ள அரசியல் தலைவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என அது கோரிக்கை விடுத்துள்ளது.

மாலியில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். அங்கு சட்டம் ஒழுங்கு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரனியோ குற்றெரஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன தமது கண்டனங்களை ஒரு பக்கச்சார்பாக வெளியிட்டுள்ளன. கடந்த பல வாரங்களாக வீதிகளில் இறங்கி போராடிய மாலி மக்களின் குரல்களையும் அவர்கள் கேட்க வேண்டும் என பிரித்தானியாவின் அபடீன் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் மனு லெகுன்ஸ் தெரிவித்துள்ளார்.

மாலி மக்கள் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற இராணுவம் வெளிவந்துள்ளது. கெயிறாவின் வெளியேற்றத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் விரும்பினார்கள். அவரின் வெளியேற்றம் என்பது நாடு புதிய பாதையில் பயணிப்பதற்கான வழியை திறந்துள்ளது. அரசியல் முறைமைக்கு அப்பாலான மாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பு, பிரான்ஸ், ஐ.நா மற்றும் ஆபிரிக்க கூட்டமைப்பு ஆகியன தெரிவித்துள்ளன.

ஆனால் ஆபிரிக்காவின் பல நாடுகளில் அரசியல் முறைமைக்கு அப்பாலான பல நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஐவேரி கோஸ்ட்டில் அரச தலைவர் மூன்றாவது தடவை பதவிக்கு முயற்சி செய்கின்றார் ஆனால் ஐ.நா எதுவும் கூறவில்லை. குனியா கொனக்றே மாலிக்கு அதிக தொலைவில் இல்லை. அங்கும் அதிபர் மூன்றாவது தடவை பதவிக்கு வர முயற்சி செய்கின்றார். எனவே அரசியல் யாப்பு முறையின் படி எதுவும் நடக்கவில்லை என்பதே தெளிவானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊழல், தேர்தல் முறைகேடுகள், பாதுகாப்பு அற்ற தன்மை தொடர்பில் மக்கள் மாலி அரசின் மீது கடுமையான எதிர்ப்பு மனநிலையில் இருந்தனர் அதுவே போராட்டமாக மாறியது. கெயிறாவின் கட்சிக்கு மேலதிகமாக 10 ஆசனங்களை வழங்குவதற்கு அரசியல் யாப்பு திருத்த நீதிமன்றம் கடந்த ஏப்பிரல் மாதம் முயற்சி செய்ததும் அங்கு அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அவரது கட்சி 31 ஆசனங்களை பெற்றிருந்தது.

இராணுவம் தலையிட்டதை தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் கடந்த ஜூலை மாதம் வன்முறையாக மாற்றம் பெற்றது. இந்த சம்பவங்களில் 14 பேர் கொல்லப்பட்டிருந்ததாக மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய அரசின் நீக்கம் என்பது ஆச்சரியமானது ஒன்றல்ல என அபிரிக்காவின் அனைத்துல ஊடக குழுவின் ஆய்வாளர் மாறே றொஜர் பிலேவா தெரிவித்துள்ளார். பல வருடங்களாக மாலியின் நிலமை பதற்றமாக வே இருந்தது. அது கடந்த வாரங்களாக உக்கிரம டைந்திருந்தது. இந்த நிலையை இராணுவம் தனக்கு சாதகமாக்கியுள்ளது. இராணுவத்திடம் போதுமான ஆயுதங்கள் இல்லை, அதனால் அங்கு ஜிகாத் குழுக்களுடன் இடம்பெற்று வந்த மோதல்களை இராணுவத்தினால் கட்டுப்படுத்த முடியவில்லை. இராணுவம் பலரை இழந்திருந்தது. இதனால் இராணுவம் அரசு மீது நம்பிக்கையிழந்திருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இராணுவப் புரட்சி மூலம் முன்னைய அரச தலைவர் அமடோ ரோமானி ரோறி பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் நடை பெற்ற தேர்தலின் பின்னர் 2013 ஆம் ஆண்டு கெயிறா பதவிக்கு வந்திருந்தார். ஆனால் அவர் நாட்டை ஒருமைப்படுத்த முயன்றதாக கூறுகின்றார் வொசிங்டனில் உள்ள அமெரிக்கன் பல் கலைக்கழகத்தின் அரசியல் துறை பேராசிரியர் வில்லியம் லோரன்ஸ்.

2018 ஆம் ஆண்டு அவர் மீண்டும் அரச தலைவரான தெரிவு செய்யப்பட்ட போதும், நாட்டில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவில்லை, மேலும் வடக்கில் இடம்பெறும் மோதல்களையும் முடிவுக்கு கொண்டுவர முயற்சிக்கவில்லை.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற தேர்தல் முறைகேடுகள் அங்கு மிகப்பெரும் அரசியல் குழ ப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. கொரோனோ வைரசின் தாக்கமும் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை எற்படுத்தியுள்ளது. வட பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரதான எதிர்க்கட்சித் தலைவரை கைது செய்ததும் இந்த அனர்த்தத்திற்கு காரணம் என வில்லியம்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரச தலைவரை பதவியில் இருந்து நீக்கியது அங்கு உறுதித்தன்மையை குலைத்துள்ளதாக பாதுகாப்பு துறைகளுக்கான ஆய்வு நிறுவனத்தின் ஆய்வாளர் போபகர் சங்கரே தெரிவித்துள்ளார்.

மாலியில் தோன்றியுள்ள இந்த நில மை அதனை சுற்றியுள்ள நாடுகளினதும் உறுதித் தன்மையை பாதிக்கலாம் என மேற்கு ஆபிரிக்க நாடுகள் அஞ்சுகின்றன. இந்த பிரச்சனை தமது நாடுகளில் இடம்பெறும் தேர்தல்களில் அல்லது அரசியலில் எதிரொலிக்கலாம் என அந்த நாடுகள் அச்சமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**நன்றி: அல்ஜீரா**

## பாதுகாப்பு அமைச்சும்... தொடர்ச்சி...

கச் செயற்பாடுகளில் முதன்மை பெற்றிருந்தன.

யுத்தம் காரணமாக சிவில் நிர்வாகம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இடம் பெற்று வந்தது. குறிப்பாக மக்களுக்குரிய அத்தியாவசிய சேவைகளான உணவு விநியோகமும், மருத்துவ சேவையுமே முதன்மை பெற்றிருந்தன. சிவில் நிர்வாகிகள் இந்த முன்னுரிமையின் அடிப்படையிலேயே தமது கடமைகளில் ஈடுபட்டிருந்தார்கள். மிகவும் அச்சுறுத்தலான வேளைகளிலும்கூட அவர்கள் தங்களுடைய உயிர்களைப் பணயம் வைத்துச் செயற்பட்டிருந்தா ர்கள். சில சிவில் நிலை அதிகாரிகளும், அரச ஊழியர்களும் யுத்த மோதல்களில் சிக்கியும், குண்டு வெடிப்புக்கள், எறிகணை தாக்குதல்களுக்கு உள்ளாகியும் உயிரிழந்துள்ளனர்.

பாதுகாப்பற்ற நிலைமை மட்டுமல்லாமல், யுத்தப் பிரதேசத்தின் மீது அரசாங்கம் நடைமுறைப்படுத்திய பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் காரணமாக சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் இராணுவ அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். குறிப்பாக அத்தியாவசிய பொருட்களாகிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் விநியோகத்தில் ஒரு வடிகட்டல் முறைமையை இராணுவத்தினர் செயற்படுத்தி இருந்தனர். எரிபொருள் விநியோகத்திலும் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந் தன.

### யுத்தகால நடைமுறைகள்

உணவுப் பொருட்களில் சொக்லட்டுக்கள், பிஸ்கட்டுகள்மற்றும்தகரங்களில்அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் என்பவற்றை யுத்த மோதல்கள் இடம்பெற்ற பொதுமக்கள் சிக்கியிருந்த வன்னிப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனை மேற்பார்வை செய்வதற்காக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

அரசாங்கத்தினால் விநியோகம் செய்யப்பட்ட அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு செல்வதற்கான கோரிக்கை படிவங்கள் அரச அதிபர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை கைக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கோரிக்கை படிவங்களில் என்னென்ன பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்பது பட்டியலிடப் பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பட்டியலைப் பார்வையிடுகின்ற பொறுப்பு வாய்ந்த இராணுவ அதிகாரி அவற்றில் தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் இருந்தால் அவற்றை நீக்கிவிட்டு, பாதுகாப்புச் செயற்பாட்டுக்கு இசைவான அல்லது தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காத பொருட்களுக்கான அனுமதியே வழங்கப்பட்டு வந்தது. அதே வேளை எரிபொருள் என்னென்ன தேவைக்காகக் கோரப்படுகின்றது என்ற காரண காரிய விபரத்துடன் கூடிய அளவிலான கோரிக்கையும் கடுமையான பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு விநியோக அளவுகள் தாராளமாக வெட்டிக் குறைக்கப்பட்டன.

அதேவேளை என்னென்ன பொருட்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன என்பது பற்றிய விபரப் பட்டியலும் அரச வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் துறையினர் அத்தியாவசிய பொருள் விநியோகத்தில் ஈடுபடும்போது தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்ல முயன்றாலும் அல்லது அவற்றைக் கொண்டு செல்லும்போது பிடிபட்டாலும் கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகியிருந்தனர். இந்த வகையில் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதுடன், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் உள்ளாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இத்தகைய தீவிரமான நிலைமையிலும்கூட உள்நாட்டலுவல்கள் அமைச்சு பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவில்லை. சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் இராணுவத் தலையீடு சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டிருந்தது. அதுவும் தேசிய பாதுகாப்பின் நிமித்தம் இது மேற்கொள்ளப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததேயொழிய பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் கொண்டு வரப்படவில்லை.

பொதுஜன பெரமுன மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சி அமைத்துள்ள இன்றைய சூழலில் யுத்த நெருக்கடிகள் எதுவுமில்லை. தேசிய பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் சிவில் நிலைமை களில் காணப்படவில்லை. யுத்தமோதல்கள் முடி வடைந்து பத்து வருடங்களு க்கு மேலாகின்றன.

சிவில் நடைமுறைகளும், சிவில் நிர்வாகச் செயற்பாடுகளும் இக்காலப் பகுதியில் எவ்வித இடையூறுமின்றி இடம்பெற்று வந்துள்ளன. சிவில் நிர்வாகத்திற்கு இடைஞ்சல்களை ஏற்படுத்த வல்ல பயங்கரவாத அச்சுறுத்தல்கள் இல்லை. பயங்கரவாதச் செயற்பாடுகளும் இதுவரையில் பதிவாகவில்லை.

### ஜனநாயகத்திற்கு நல்லதல்ல

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களானது முழுக்க முழுக்க



தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தைப் போன்று அது எந்த வகையிலும் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இத்தகைய சூழலில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதற்கான தேவையும் அவசரமும் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் இது முழுக்க முழுக்க நாட்டின் சிவில் நிர்வாக நிலைமைகளை இராணுவமயப்படுத்தலுக்கான ஒரு முயற்சியாகவே தெரிகின்றது. ஜனநாயக ஆட்சி முறைக்கு ஆசிய பிராந்தியத்தில் உதாரணமாகக் கருதப்படுகின்ற இலங்கையில் இராணுவமயமான ஆட்சி முறைக்கு வழிகோலுவது, நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்கு உட்படுத்துகின்ற நடவடிக்கையாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

சிவில் அதிகாரிகள் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுத்து, சிறப்பான சிவில் நிர்வாக நடைமுறையை உருவாக்குவதற்காகவே சிவில் நிர்வாகத் துறையில் முக்கியமான பதவிகளுக்கு பணி ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளையும் இராணுவ அதிகாரிகளையும் புதிய அரசு நியமனம் செய்தபோது, காரணம் கூறப்பட்டது.

சிவில் நிர்வாகத் துறையில் ஊழல்கள் மலிந்திருந்தால் அவற்றை இல்லாமல் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் நடைமுறையில் இருக்கின்றன. குறிப்பாக லஞ்ச ஊழல்களைத் தடுப்பதற்காகவே லஞ்சத் தடுப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு விசேட அதிகாரங்களுடன் செயற்பட்டு வருகின்றது. இதுபோன்ற சட்டங்களையும் உரிய கட்டமைப்புக்களையும் பயன்படுத்தி சிவில் நிர்வாகத்தில் நிலவுகின்ற ஊழல்களை இல்லாதொழிக்க முடியும். சிவில் நிர்வாகத்தை ஊழலற்ற முறைமைக்குக் கொண்டு செல்லவும் முடியும்.

• • •

## நம் எதிர்காலம்... தொடர்ச்சி...

– வெகுமக்கள் எழுச்சி உருவா கியுள்ளது. மாணவர்களிடையே இவ்வெழுச்சி தெரிகிறது. இந்த எழுச்சியை மேலும் வளர்ப்பதும் ஒருங்கிணைப்பதும் மிகமிகத் தேவை!

எதிர்ப்பக்கம் – சிங்கள அரசியலில் – இராசபட்சே குடும்ப எதேச்சாதிகாரத்திற்கு எதிராக – இதர சிங்களக் கட்சிகளின் போராட்டங்களும்



– அவற்றை ஒடுக்கும் அரசின் வன்முறைகளும் தீவிரப்படும். இலங்கையைத் தன்தன் முகாமில் வைத்துக் கொள்ள, இந்திய – சீன அரசுகள் கொடுக்கும் நெருக்கடிகள் – அமெரிக்க வல்லரசின் தலையீடுகள் எனப்பல வெளி அழுத்தங்களுக்கு சிங்கள அரசு உள்ளாகும். குழுச் சண்டை அரசியலில் சிங்களம் சிதறும் சூழலும் எழலாம்!

வரலாறு நமக்காக எவ்வளவோ வாய்ப்புகளை வைத்திருக்கிறது. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள, அமைப்பு வழிப்பட்ட *(Organisational)* ஆற்றலையும், உத்தி வழிப்பட்ட *(Strategical)* திறமையையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் ஆகியோர் கூட்டணியாகச் செயல்பட முயல வேண்டும். மலையகத் தமிழர்களை இணைக்க வேண்டும். அவர்களின் அமைப்புகளுடன் பேசி – ஒருவருக்கொருவர் துணை நிற்கும் உறவை வளர்க்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் (2015) தீர்மானத்தைச் செயலுக்குக் கொண்டு வருதல், வடக்கு - கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுதல், வடக்கு - கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்தல், சனநாயக உரிமைகள் - குடிமை உரிமைகள் முதலியவற்றை மீட்டல், தமிழை முழுமையான ஆட்சி மொழியாக, கல்வி மொழியாக செயல்படுத்த வலியுறுத்தல், தமிழர்கள் தனித் தேசிய இனம் என்ற நிலைபாட்டைத் தொடர்ந்து வலியுறுத்துவது, அவ்வப்போது எழும் மக்கள் கோரிக்கைகளுக்குப் போராடுதல் போன்ற செயற்பாடுகளைக் கொண்டு, தமிழீழத் தேசிய வெகு மக்கள் இயக்கத்தைக் கட்டுக் கோப்பாக வளர்க்க வேண்டும். இந்த சனநாயகப் போராட்டங்களிலும் ஈகங்கள் செய்ய வேண்டி வரும். அதற்கு முகம் கொடுக்கும் அமைப்பாக வளர வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் இலட்சிய உறுதியும், இலட்சியத்திற்கான முழு ஒப்படைப்பும், அறிவுக் கூர்மையும், அறச் சிந்தனையும், வீரச் சொற்களும் இன்றும் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன.

மாவீரர் நாள் உரையில் தலைவர் சொன்னார்: தமிழ் ஈழ விடுதலை இலட்சியம் எமது தலைமுறையில் நிறைவேறவில்லை என்றால், அந்த இலட்சியத்தை அடுத்த தலைமுறைக்குக் கையளிப்போம்! போராட்ட வடிவம் மாறலாம்! ஆனால் ஈழ விடுதலைப் போராட்டம் வெல்லும் வரை தொடரும்.


இன்றும் அவர் வழிகாட்டுகிறார் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டும். நம் எதிர்காலம் நம் கையில் என்று நம்புங்கள்!

தொடரும்......

## தமிழருக்கான தீர்வை ... தொடர்ச்சி...

தமிழர்களுக்கான தீர்வை பெற்றுத் தரக்கூடியவர் யார் என்ற கேள்விக்கு, 70% வீதமானவர்கள் எவருமில்லை என் கூறியிருப்பது தமிழ் மக்களின் விரக்தி நிலைமையையும், நேர்மையான தமிழ் தேசிய தலைமையின் தேவையையும் வலியுறுத்தி நிற்கிறது. இக்கருத்துக்கு வலிமை சேர்ப்பது போல் 10% மானவர்கள் விடுதலைப்புலிகளால் மட்டுமே முடியும் என குறிப்பிட்டிருப்பதிலிருந்து காணலாம். மேலும் 10%மானவர்கள் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டால் முடியும் என குறிப்பிட்டிருப்பதையும், 5% வீதமானவர்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் எனவும் 5%மானவர்கள் தமிழ் தேசிய மக்கள் கூட்டணியால் முடியும் என குறிப்பிட்டிருப்பது இன்னமும் நம் மக்களிடையே உள்ள நம்பிக்கை எனும் உயிர்ப்பான வேரை நமக்கு இனம் காட்டுவதாக உள்ளது.

இதே கேள்விக்கான பதிலில் 50% மானவர்கள்எவ்விதகாரணங்களையும்குறிப்பிடாதபோதும் 50%மானவர்கள் தமிழ் தேசிய கட்சிகளிடையே ஒற்றுமையின்மை, நம்பிக்கையின்மை, துணிவின்மை, நேர்மையின்மை என்பவற்றை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். இதனை தமிழ் தேசிய கட்சிகள் தமது கருத்தில் எடுத்து ஒற்றுமை, நேர்மை,




துணிவு, என்பவற்றினூடான மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டியதே இன்றைய தேவையாக உள்ளது. அதே வேளை தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ் சமூக அமைப்புகள் மக்களின் இக்கருத் துக்களை கவனமாக உள்வாங்கி மக்களின் தேவைகளையும், விருப்புக்களையும் நிறைவு செய்ய கூடிய ஒருங்கிணைந்த சமூக வேலைத் திட்டங்களினூடாக தமிழ் தேசிய இருப்பிற்கான வே லைத் திட்டங்களை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

இன்று இலங்கையில் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களில், ஏழு மாவட்டங்கள் சிங்கள குடியேற்றங்களாலும் ஆக்கிரமிப்புகளாலும் விழுங்கப்பட்டு வருவதுடன், தமி ழரின் குடிப்பரம்பல் குறைக்கப்பட்டு சிங்கள அரசினாலும், இஸ்லாமிய கடுங் கோட்பாளர்களினாலும் கபளீகரம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் யாழ் மாவட்டம் சமூக, பொருளாதார, பண்பாட்டு சீரழிவு மூலமும், ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமான கட்டமைக்கப்பட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு சீரழிவுடன் கூடிய நில அபகரிப்பு, குடியேற்றம் மூலமும் இனஅழிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

இதனை 'இலக்கு' கடந்த காலங்களில் பதிவு செய்து வந்துள்ள போதும், ஒரு சில விடயங்கள் மட்டும் நலன் விரும்பிகளாலும், உள்ளூர் கட்ட மைப்புகளாலும் விளம்பரமின்றி சீர்செய்யப்பட்டுள்ளன. எனினும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தனித்துவமான பிரச்சினைகளை இனங்கண்டு, சமூக கட்டமைப்புகளூடாக தீர்வுகளை பெற்று கொடுக்கவும் எமது இருப்பையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தவும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இத்த கைய கருத்து கணிப்புகளும் ஆய்வுகளும் மேற்கொள்வதற்கும் தீர்வுகளை பெறுவதற்கும் 'இலக்கு' மேற்கொள்ளும் பணிகளில் அனைவர தும் பங்களிப்பை வேண்டி நிற்கிறது.

• • •

## சொந்த மக்கள் மேல் ... தொடர்ச்சி...

சரியானதாக இருக்கலாம். ஆனால் அந்த ஆணை வடக்குக்கும் கிழக்குக்கும் பொருந்தும் என்று சொல்லும் அவரது கூற்று தவறானதாகும்.

வடக்கையும்கிழக்கையும்பொறுத்தவரையில் தமிழ் மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றே மக்கள் ஏகமனதாக, தங்கள் ஆணையை வழங்கியிருக்கிறார்கள். அமர்ந்திருக்கும் உங்களையும் உள்ளடக்கியே இதனை நான் கூறுகின்றேன்.

'தமிழ் மக்களின் உரிமைகள்' என்று சொல்லும் போது தமிழர் என்ற எங்கள் அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

சிறீலங்கா பல்லின மக்களைக்கொண்ட ஒரு நாடு. இந்த நாட்டில் இரு தேசங்கள் இருக்கின்றன என்பதுடன் எமது உரிமைகளும் சமத்துவமாக இருக்க வேண்டும். எங்கள் அந்தஸ்து சமமானதான இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அந்தஸ்தின் அடிப்படையிலேயே சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு அரசியல் யாப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே கடந்த தேர்தலில் மக்கள் ஏகமனதாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

உங்களை எடுத்துக்கொண்டால் (திரு.அங்கஜன்),தேர்தலில் வெற்றி பெற்று மக்களுக்கு நீங்கள் நன்றி செலுத்தி ஆற்றிய உரைகளில், தமிழர் உரிமைகளுக்கு நீங்கள் எதிரானவன் அல்ல என்றும் அதற்கு மாறாக தமிழர் உரிமைகளின் பக்கமே நீங்கள் நிற்கிறீர்கள் என்பதையும் நீங்கள் முக்கியமாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறும் காலம் வரையும் பொறுத்திருக்க முடியாது என்றும் அதற்கிடையில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே உங்கள் பொறுப்பு என்றும் நீங்கள் தெரிவித்தீர்கள்.

ஈபிடிபியின் தலைவரான கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது தேர்தல் பரப்புரையில் பயன்படுத்திய சுவரொட்டிகளில் 'தமிழர் தேசம் தலைநிமிர' என்ற சொற்றொடரைத் தனது சுலோகமாகப் பயன்படுத்தியிருந்தார்.

ஆகவே 'நாம் ஒரு தேசம்' என்பது வடக்கிலும் கிழக்கிலும் ஏகமனதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆணை மீறப்பட முடியாத ஒன்றாகும். இந்த நாட்டின் 72 ஆண்டுகால வரலாற்றை எடுத்துக்கொண்டால், தமிழ் மக்கள் தொட ர்ச்சியாகவே இந்த ஆணையை வழங்கி வந்தி ருக்கிறார்கள் துணைத் தவிசாளர் அவர்களே, இன்னொரு விடயத்தை இங்கு நான் முன்வைக்க விரும்புகிறேன்.

நாட்டின் அதிபர் இறைமையைப் பற்றி உரையாற்றியிருக்கிறார். எந்தச் சூழ்நிலையிலும் இந்த நாட்டின் இறைமை மீறப்படுவதற்கு தான் அனுமதிக்கப்போவதில்லை என அவர் கூறியிருக்கிறார். அது சரியானது தான்.

அதே வேளையில், பன்னாட்டு உறவுகளைப் பொறுத்தவரையில் இறைமை தனித்து வருவதில்லை, அதற்குக் குறிப்பிட்ட கடப்பாடுகள் உண்டு என்பதை அவர் கட்டாயம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குள், அரசு தனது மக்களைப் பாதுகாக்காத சூழலில் அங்கே இறைமைக் கோட்பாடு கேள்விக்குள்ளாக்கப்படும் என்பது இக்கோட்பாட்டின் மிக அடிப்படைக் கொள்கையாகும்.

அல்லது அதைவிட இன்னும் மோசமான ஒரு சூழ்நிலையில் அரசே தனது சொந்த மக்கள் மேல் தாக்குதலைத் தொடுக்கும் போது அங்கே இறைமைக் கோட்பாடு ஒருபோதுமே அரசுக்குப் பாதுகாப்பை வழங்க முடியாது.

இந்த நாடு ஒரு போருக்கு முகங்கொடுத்திருக்கிறது.

போரில் மிகக் கொடூரமான குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்று முழு உலகமே சொல்லிக்கொண்டிருக்கிறது. இதில் அரசு தான் முதலாவது குற்றவாளியாக குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

(இக்கட்டத்தில் சரத் வீரசேகர குறிக்கிட்டு "போர்க் குற்றங்கள் இழைக்கப்படவில்லைஎன்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கே இவர் பொய் சொல்கிறார்" என்கிறார்)

ஆகவே எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இழைக்கப்பட்ட மிகக்கொடூரமான குற்றங்களுக்கு எந்த ஒரு நாட்டின் அதிபரோ அல்லது எந்த ஒரு நாடோ பொறுப்புக்கூறலிலிருந்து விலகி இறைமைக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது.

தமிழ் மக்களே இழைக்கப்பட்ட இந்த மிகக் கொடூரமான குற்றங்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுடன், இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் இதற்கு பன்னாட்டுப் பொறுப்புக்கூறல் அவசியமானது என்றும் தமிழர் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

## பௌத்தமும் தமிழும் ... தொடர்ச்சி...

மொழிக்கு முன்னர் சிங்கள மொழிக்கு முன்னர் தமிழ் மொழியில் ஆக்கப்பட்டமை வரலாறு. தமிழின் ஐம்பெரும் காப்பியங்களான சீவகசிந்தாமணி, குண்டலகேசி, மணிமேகலை என்பன பௌத்த காப்பியங்களே.

இவற்றை அடியொட்டியதாகவே சிங்கள காப்பியங்கள் உருவாகின என்பதே மறுக்க முடியாத உண்மை.

உலக வரலாற்றை புரட்டிய உலக வரலாற்றில் யுத்த வெறியை அகற்றிய உலக வரலாற்றில் மனுக்குலத்தின் பெறுமதியை உயர் த்திய கலிங்க யுத்தத்தை நினைக்கும் பொழுது என் மனக்கண் முன் ஞாபகம் வருவது முள்ளிவாய்க்கால் யுத்தமும் அதனூடாக என் தமிழ் தேசிய உறவுகள் கண்ட அவலமுமே. எனது பார்வையில் கலிங்க மண் கண்ட அவலம், துயரம், அழிவு அத்தனையும் என் முள்ளிவாய்க்கால் மண் கண்டது.

## தமிழ் தேசிய கூட்டமை ... தொடர்ச்சி...

பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (21) மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்திலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

## சுற்றுச் சூழல் ... தொடர்ச்சி...

ள்ளன.

மணல்அகழ்வு, காடுகள்அழிப்பு, கனிமப் பொருட்கள் அகழ்வு தொடர்பில் தகவல்களை வெளியிடும் ஊடகவியலாளர் கள் அதிகம் தாக்கப்படுவதாக இந்திய ஊடகவியலாளர் சந்தியா ரவிசங்கர் தெரிவித்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.




# உலகளாவிய அறிவியல் ஆராய்ச்சி போட்டியில் சாதனை:

## பட்டிருப்பு தேசிய பாடசாலை பெருமிதம்

**ரவீந்திரமூர்த்தி**

சுவீடன் நாட்டின் *Stockholm Junior Water Prize Competition* ஆனது நீர் தொடர்பான பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கும் நோக்கத்துடன் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியாகும். இதில் தெரிவு செய்யப்படும் சிறந்த ஆராய்ச்சிக்கான விருது சுவீடன் நாட்டின் முடிக்குரிய இளவரசி விக்டோரியா அவர்களினால் வழங்கப்படும்.




இதனடிப்படையில் இவ்வருடம் நடைபெற்ற ஆராய்ச்சி போட்டியில் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை ஆராய்ச்சி குழுவினர் இலங்கை சார்பாக பங்குபற்றி 29 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பெறப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரையில் முதல் 12 இடங்களிற்குள் முன்னேறி இறுதிச் சுற்றிற்கு தெரிவாகியுள்ளனர்.

இலங்கை வரலாற்றில் கடந்த 30 வருடங்களில் இதுவே இறுதிச்சுற்றிற்கு தெரிவாகியுள்ள முதலாவது சந்தர்ப்பமாகும்.




இவ் ஆராய்ச்சியில், கழிவு நீரிலிருந்து பார உலோகமான கட்மியத்தை அகற்றுவதற்கான இலகு முறையொன்றை நாவல் விதையின் நனோ துணிக்கையை பயன்படுத்தி கண்டறியப்பட்டது.

இப்பாடசாலையின் இரசாயனவியல் ஆசிரியர் திரு. செல்வராஜா தேவகுமார் அவர்களின் வழிகாட்டலில் உயிரியல் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களாகிய செல்வன். தம்பிப்பிள்ளைதினோஜன் மற்றும் செல்வி. கணேசமூர்த்தி அபிநயா ஆகியவர்களினால் இவ் ஆராய்ச்சி நடாத்தப்பட்டது.

இவ் ஆராய்ச்சி மூலமாக ஆசியாவிற்கு பெருமை தேடித்தந்த பாடசாலையாக மட்டு. பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம் தேசியபாடசாலை வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இவ்வாராய்ச்சியின் சுருக்கத்தை உங்களுடன் பகிர்வதில் சந்தோசமடைகின்றேன்.



ஆரம்ப காலம் தொடக்கம் எம் மூதாதையர்கள் கதிர்காமத்திற்கான பாதயாத்திரையின் பொருட்டு காட்டு வழியால் நடந்து செல்லும் போது நாவல் *(Eugenia jambolana- Syzygium cumini)* விதைகளைப் பயன்படுத்தி நீரைச் சுத்திகரித்துப் பருகினர்.

இப் பாரம்பரிய முறையையும், நவீன விஞ்ஞான முறையையும் ஒன்றிணைத்ததன் விளைவாக பசுமையான முறையில் மக்னடைட் (Fe3O4) துணிக்கைகளை உருவாக்கி அதன் மூலம் நீரிலுள்ள கட்மியம் அயன்களை அகற்றுவதற்கான ஆய்வுகள் கிழக்குப் பல்கலைக்கழக இரசாயனவியல் ஆய்வுகூடத்தில் *(Eastern University Sri Lanka)* முன்னெடுக்கப்பட்டது.

இத் துணிக்கைகள் பல்லினவியல்புக்குரிய மேற்பரப்பைக் கொண்ட பளிங்குகளாகவும், நனோ மீற்றர் பருமனுடையதாகவும், பலவிதமான சேதனப் பிணைப்புகளைக் கொண்டதாகவும், குறிப்பாக காந்த இயல்பைக் கொண்டதாகவும் வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி உறுதிப்படுத்தப்பட்டது.

இதற்காக *sri Jayawardenapura university Sri Lanka, Sri Lanka Nanotechnology Institute (SLINTEC)* ஆகியவற்றின் உதவிகள் பெறப்பட்டன. மேலும் உருவாக்கப்பட்ட இத்துணிக்கையானது கட்மியம் அயன்களின் (Cd2+) புறத்துறிஞ்சலில் காட்டும் நாட்டம் பற்றியும் ஆராயப்பட்டது.

இந்த ஆராய்ச்சியின் முடிவாக, உருவாக்கப்பட்ட துணிக்கையானது கழிவு நீரிலுள்ள ஏறத்தாழ 92 சதவீதமான கட்மியம் (Cd2+) அயன்களை 30 நிமிடங்களில் அகற்றக்கூடியது எனக் கண்டறியப்பட்டது. சாதாரணமான அயனிக் ஒட்சைட்டு துணிக்கைகள், சர்வதேச ரீதியாக இற்றை வரை கண்டறியப்பட்ட துணி க்கைகள் நீரிலிருந்து பார உலோகங்களை அகற்றப் பயன் படுத்துவதைவிட பசுமையான முறையால் உருவாக்கப்பட்ட இவ் அயனிக் ஒட்சைட்டு துணிக்கைகளை (Fe3O4) பயன்படுத்துவது வினைத்திறனானது எனக் கண்டுபிடிக்கப்பட்டது டன், இவற்றை நாளாந்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் இதனை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்த சில வெளிநாட்டு நிறுவனங்களும் முன்வந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சர்வதேச போட்டியின் இறுதி முடிவானது எதிர்வரும் 25ஆம் திகதி சுவீடன் நாட்டின் முடிக்குரிய இளவரசி விக்டோரியா அவர்களினால் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பாடசாலையானது மேற்குறித்த ஆராய்ச்சி மாத்திரமன்றி மேலும் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல தேசிய விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இதன் சாதனைகளில் குறிப்பிடத்தக்கவை சில:**

- 2018ஆம் ஆண்டின் எமது நாட்டின் மிகச்சிறந்த பாடசாலை விஞ்ஞான கழகம் எனும் தேசிய விருது தேசிய விஞ்ஞான நிறுவகத்தினால் வழங்கப்பட்டது.

- 2018ஆம் ஆண்டின் மிகச்சிறந்த பாடசாலை விஞ்ஞான ஆராய்ச்சிக்கான விருதுகள் இரண்டு தேசிய விஞ்ஞான நிறுவகத்தினால் வழங்கப்பட்டது.



- 2019ஆம் ஆண்டின் மிகச்சிறந்த பாடசாலை விஞ்ஞான ஆராய்ச்சிக்கான விருதுகள் மூன்று தேசிய விஞ்ஞான நிறுவகத்தினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் இரசாயனவியல் ஆசிரியர் செல்வராஜா தேவகுமார் அவர்கள் பாடசாலையில் வெவ்வேறு மாணவக்குழுக்களை அமைத்து சர்வதேச ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்வது வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கது மாகும்.